2.1	ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இன்படி, நிலையான சொத்து பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பேணுதல்.	√		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பிதல் மற்றும் பராமரித்தல்.	√		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத் திறைசேரிக்குச் உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	√		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
2.7	பொருட் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.8	இருப்புப் பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
2.9	இழப்புப் பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	√		
2.10	இணக்கப்பாட்டு பதிவேட்டினைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	√		
2.11	காசோலை அடிக்கட்டைப் புத்தகங்களின் பதிவேட்டினைப் (GAN20) பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	√		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	√		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது.	√		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக் கப்பட்டது.	√		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இல. அரச கணக்கு சுற்றறிக்கையின்படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை.	√		
4	**வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல்	√		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	√		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் அதை ச.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	√		
4.5	வருடாந்த காசுப் பாச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	√		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளன.	√		
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) டி.எம்.ஏ /1-2019 இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் ஆலோசனை மேற்கொண்டதன் பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்றினைத் தயாரித்தல்	√		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கை களுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் பதிலளித்தல்.	√		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் அடிப்படையில், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்.	√		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் நிதி ஒழுங்குவிதி 134(3) இன் அடிப்படையில், கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல்.	√		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம்.ஏ. 1-2019 சுற்றறிக்கையின்படி, குறித்த ஆண்டு காலப்பகுதியில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	சொத்து முகாமைத்துவ சுற்றிக்கை இல.01/2017 இன் பந்தி 07 இன் படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.	√		
8.2	மேற்குறித்த சுற்றிக்கையின் 13 ஆம் பந்தியின்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பெயர் குறிப்பீடு செய்யப்பட்ட உத்தியோகத்தரின் விபரங்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.	√		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.01/2020 இன்படி, உரிய திகதியில் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.	√		
8.4	மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பன இருப்பு மதிப்பாய்வுச் சபையினூடாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதுடன் ஏனைய அது தொடர்பான பரிந்துரைகள், நடவடிக்கைகள் என்பன சுற்றிக்கையில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்டன.	√		
8.5	நி.பி.772 இன்படி, பாவனைக்குதவாத பொருட்களின் விற்பனையானது நடைமுறைப் படுத்தப்பட்டது.	√		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கைகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பனவற்றினைத் தயாரித்து அவற்றினை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 6 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	√		
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு அவை புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	√		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103, 104, 109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	√		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் விதிகளின்படி, எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	√		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்துப் பதிவு புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	√		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உரிய திகதியில் கணக்காய்வு மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளன.	√		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்பாடற்ற கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.	√		
10.3	வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்ட மீதிகள் தொடர்பில் நிதிசார் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டிய சீராக்கல்களுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.	√		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் செலவின எல்லையினை விஞ்சாமல் செலவிடப்பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
11.2	நி.பி.94(1) இன்படி, குறித்த ஆண்டின் இறுதியில் ஏற்பாடுகளினை விஞ்சாத பொறுப்புக்கள் மீதமாயுள்ளன.	√		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	√		
12.2	நிலுவையாகவுள்ள கடன்கள் தொடர்பில் சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்தல்.	√		
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக காணப்படும் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.	√		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	செயலிழந்த வைப்புக்களின் விற்பனை தொடர்டபில் நி.பி.571 இன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	√		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுப் பதிவேடானது இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.	√		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியிலுள்ள காசேட்டு மீதியானது TOD இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	√		
14.2	நி.பி.371 இன்படி வழங்கப்பட்ட உப கட்டுநிதியானது குறித்த பணியானது பூர்த்தியடைந்ததிலிருந்து ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.	√		
14.3	குறித்த தேவைக்காக உருவாக்கப்பட்ட உப முற்பணமானது நி.பி.371 இன்படி அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லையினை விஞ்சும் வகையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	√		
14.4	முற்பணக் கணக்கு மீதியானது மாதாந்தம் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப் பட்டுள்ளன.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஒழுங்குவிதிகளின்படி, வருமானத்திலிருந்து மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	பொருத்தமற்றது		
15.2	வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது இறைவரிக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தன.	பொருத்தமற்றது		
15.3	நி.பி.176 இன்படி, வருமான நிலுவைகளின் மீளளிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன	பொருத்தமற்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	பதவியினருக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.	√		
16.2	பதவியணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன	√		
16.3	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இல. சுற்றிக்கையின்படி, அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான தகவல் பதிவேடும் பேணப்பட்டு வருவதுடன் அது தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குமைவாக இற்றைப் படுத்தப்பட்டும் வருகின்றது.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
17.2	பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணையதளம் அல்லது மாற்று வழிமுறைகள் மூலமாக அளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த இணையத் தளம் மற்றும் மாற்று வழிமுறைகளின் மூலம் பொதுமக்களுக்கெதிரான மெச்சுதல்கள் /குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	√		
17.3	தகவலறியும் சட்டத்தின் பிரிவுகள் 08 மற்றும் 10 இன்படி, வருடாந்தம் அல்லது வருடத்திற்கு இரண்டு தடவை வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	√		
18	**பிரஜைகள் பட்டயத்தினை செயற்படுத்துதல்**			
18.1	பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி, நிறுவனத்தினால் பிரஜைகள் சாசனம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனமானது வகுக்கப்பட்டு அமுல்படுத்தப் பட்டுள்ளது.	√		
18.2	சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்தியின்படி, பிரஜைகள் சாசனம; / பிரஜைகள் வாடிக்கையாளரின் சாசனத்தினை வகுத்தல் மற்றும் தயாரித்தல் நடவடிக்கைகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு நிறுவனத்தினால் முறைமையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.	√		
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இல.பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள வடிவத்தின் நியதிகளின்படி, மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.	√		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்தல் வேண்டும்.	√		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றத ாயின் அதுபற்றி சுருக்கமாக. விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில், அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.	√		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கேற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியினை நியமித்தல்.	√		
20	**கணக்காய்வு பந்திக்கான பொறுப்புக்கள்**			
20.1	முன்னைய ஆண்டுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல்	√		

கலாசார அலுவல்கள் பிரிவு

01 ஆம் அத்தியாயம் - நிறுவன சுயவிபரம் / அமுலாக்கத்தின் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையின் பாரம்பரிய மரபுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளல், இலக்கியத்தையும் கலையையும் பேணி வளர்த்தல், தனித்துவமான ஒரு இலங்கை தேசத்தை உருவாக்குவதற்கான உன்னத பணிக்கு கலாசார அலுவல்கள் பிரிவு உறுதி பூண்டுள்ளது. இதற்காக கலாசார அலுவல்கள் பிரிவாகிய நாம் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் தேசிய கொள்கைக்கு அமையவும் நற்குணங்கள் நிறைந்த மற்றும் உணர்திறன் வாய்ந்த மக்கள் நிறைந்த ஒரு நிலையான வளர்ச்சி அடைந்த இலங்கையில் காலடி எடுத்து வைப்பதற்குத் தேவையான பாரிய பங்கினை ஆற்றி வருகின்றது. இதற்கமைய 2023 ஆம் ஆண்டிற்குள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகளில் கலாசார அலுவல்கள் பிரிவின் செயல்த் திறன் இப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 நோக்கம், குறிக்கோள், செயற்பாடுகள்

நோக்கம்

"ஒரு நிலையான வளர்ச்சியடைந்த இலங்கை"

செயற்பாடு

கலாசார மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளை தளத்தில் மற்றும் வேறு இடத்திற்குக் கொண்டு சென்று பாதுகாத்தல் , திரைப்படம், நாடகமும் அரங்கியலும், கட்புலனாகும் மற்றும் கட்புலனாகா மரபுரிமைகள், அரச ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கைக்கே உரித்தான கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்தல், மேம்பாடு மற்றும் பிரச்சாரம் செய்வதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

குறிக்கோள்கள்

- ஒரு நாட்டினுடைய கலாசாரம் அந் நாட்டு மக்களின் சுபீட்சமான நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் மிகவும் பயனுள்ள

முறையில் நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கின்ற மக்கள் நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற முக்கிய கருப்பொருளாக கருத்திற்கொண்டு எமது இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

- நாட்டின் பொதுவான தேசிய அபிவிருத்திக் கொள்கையை நிறைவேற்றச் செய்யக் கூடிய வகையில் மக்களை சுயமாக ஈடுபடுத்துகின்ற சாதகமான கலாசாரச் சூழலை நாட்டில் கட்டியெழுப்புதல்.

- இலங்கையின் பல்லினத் தன்மையை அங்கீகரித்து, ஒவ்வொரு உப கலாசாரங்களினதும் தனித்துவத்தைப் பாதுகாத்து, அனைத்து உப கலாசாரங்களும் ஒன்றாக இணைந்து இலங்கை என்ற மிகப் பெரிய கலாசாரத்தைக் கொண்ட நாடொன்றாக முன்னெடுத்துச் செல்வதும் பல்வேறு சக்திகள் மூலம் அழிந்துவருகின்ற சாதகமான கலை, கலாசார அம்சங்களை அவ்வாறான தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்.

- கலாசார மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாத்து, முன்னெடுத்துச் செல்வதும் அவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்வில் கலாசார மையம் நோக்கிய வாழ்வொன்றை திட்டமிடுதல்.

- சிறந்த கலை அம்சங்களை அறிந்துகொள்வதற்கும் அவற்றை தமது வாழ்வில் சேர்த்துக்கொள்வதற்கும் மக்களைத் தூண்டுதலும் அதன் மூலம் இலங்கை என்ற தனித்துவமுடைய கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

- கலாசார சீரழிவுக்குக் காரணமாக அமைகின்ற வெளிவாரி மற்றும் உள்வாரிக் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றை நிராகரித்தலும் இதற்கான தன்னம்பிக்கையை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தலும்.

- தேசப்பற்றுள்ள சிந்தனையை முன்வைத்து அபிவிருத்தி இலக்கை நிறைவேற்றக்கூடிய தன்னம்பிக்கையுள்ள ஒன்றிணைந்த சக்தியுடைய கலாசார சமூகத்தை உருவாக்குவதற்கான திட்டம்.

1.3 பிரதான கடமைகள்

- இலங்கையின் தேசிய கலாசாரத்தின் எல்லா அம்சங்களையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளை மேற்கொள்ளுதல்.
- கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளுக்கு சேதம் ஏற்படாத வகையில் கலாசார அடிப்படையிலான சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.
- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில் கலாசார ரீதியிலான பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்கை இனமறிதலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும்.
- வரலாற்று ரீதியிலான தொல்பொருளியல் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- நவீன மற்றும் சம்பிரதாய ரீதியிலான கலை ஆக்கங்களை மேம்படுத்துவதற்கும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- நாடக, சங்கீத மற்றும் நடனத்துறைகளின் மேம்பாட்டுக்கான செயல்நெறிகளை இனமறிதலும் நடைமுறைப்படுத்தலும்.
- அரசாங்க ஆவணங்களை விதிமுறையாக முகாமை செய்தலும் பாதுகாத்தலும்.
- அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்பட்ட பொது சேவைகளை திறமையாக மற்றும் பொது நட்பு முறையில் வழங்குதல்.
- சூறையாடுதல் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சு தனது பங்களிப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் சீர்திருத்தம் செய்தல்.
- கலாசார அலுவல்கள் விடயத்திற்கு மற்றும் இந்த விடயத்திற்குக் கீழ் இணைக்கப்பட்டுள்ள திணைக்களங்களுக்கும் சட்டபூர்வ நிறுவனங்களின் விடயங்களுக்கும் இது தொடர்பாக செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றை மேற்கொள்ளல்.

1.4



கலாசார அலுவல்கள் பிரிவு – அமைப்புத் திட்டம் 2023
கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்
அமைச்சின் செயலாளர்
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
மேலதிக செயலாளர் (மேம்பாடு / நிர்மாணிப்பு)
சி.உ.செ. (நிர்வாகம்)
பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(திட்டமிடல்)
பி.பணிப்பாளர்
உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
உள்ளகக் கணக்காய்வு
ஒருங்கிணைப்பு செயலாளர்
மொழிபெயர்ப்பாளர்
உதவிச் செயலாளர் (நிர்வாகம் /உ.ம.நிர்வாகம் / போக்குவரத்து
உதவிச் செயலாளர் (வெளிநாடு)
கணக்காளர் (கொடுப்பனவு)
உதவிச் செயலாளர் (மேம்பாடு)
உதவிச் செயலாளர் (நிர்மாணிப்பு)
பொறியியலாளர்
நிர்வாக உத்தியோகத்தர்
கிளைத் தலைவர் உ.க.
கிளைத் தலைவர் நிர்வாகம்
கிளைத் தலைவர் உ.ம.நிர்வாகம்
கிளைத் தலைவர் போக்குவரத்து
கிளைத் தலைவர் வெளிநாடு
கிளைத் தலைவர் கணக்குகள்
கிளைத் தலைவர் கேள்வி மனு
கிளைத் தலைவர் நிர்மாணிப்பு
கிளைத் தலைவர் திட்டமிடல்
2022
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
வரைவாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அலுவலக உதவியாளர்
சாரதி

1.5 அமைச்சின் கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் இயங்கிவருகின்ற திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

I. கலாசார அலுவல்கள் திணைக்களம்

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக அபிவிருத்தியடைந்த உணர்வுப்பூர்வமான மனிதர்களாக மாற்றியமைக்கும் ஒரே எதிர்பார்ப்பை நிறைவு செய்துகொள்வதற்காக இலங்கைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன், இலங்கைத் தனித்துவத்தைக் கொண்ட கலை, இலக்கிய மற்றும் கலாசார நடவடிக்கைகளை பேணுதல், மேம்படுத்தல், விஸ்தரித்தலுக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவது இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

A. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள்

- தேசிய கலா பவனம் மற்றும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபம்.
- மகாவம்ச தொகுப்பு அலுவலகம்
- அகராதி அலுவலகம்
- கலைக்களஞ்சிய அலுவலகம்
- எதிரிவீர சரத்சந்திர நாடக பயிற்சிப் பாடசாலை
- வலிசிங்க ஹரிஸ்சந்திர நூதனசாலையும் கலாசார கேந்திர நிலையமும்.
- தேசிய கலைக் கேந்திர நிலையம் - கண்டி குண்டசாலை
- வட தென் நட்பு நிலையம் - மிஹிந்தலை
- அரச நடனக் குழு மற்றும் அரச சங்கீதக் குழு

இத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகள்.

- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் அரச விழாக்கள்/ உற்சவங்களை ஏற்பாடு செய்தல், கலைஞர்கள் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கலாசார, கலை மற்றும் இலக்கிய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- அலுவலக சேவையணியினர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

II. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

1877 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இந்தத் திணைக்களமானது வளமான எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் கலாசாரம் மற்றும் இயற்கைப் பாரம்பரியத்திற்கு உரிய வளங்கள் அறிவு பூர்வமாக மற்றும் விதிமுறைகளுக்கு அமைய பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் மதிப்பீட்டுக் கற்கை மற்றும் இரசனைக்காக முன்வைத்தல் என்பன தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய நூதனசாலைகள் (10)
- மானிடவியல்ப் பிரிவு
- மானிட வரலாற்று விஞ்ஞானப் பிரிவு
- புவியியல்ப் பிரிவு
- விலங்கியல்ப் பிரிவு
- நுண்ணியல் பிரிவு
- தாவரவியல்ப் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு
- நூல்நிலையம்
- கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

III. தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்

கலாசார உரிமையின் ஒரு பகுதியாக அரசாங்க ஆவணங்களின் முறையான முகாமைத்துவம் மற்றும் பேணுகைக்காக தேசிய ஆவணக்காப்பக சட்டம் மற்றும் அது சம்பந்தப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல், நிரந்தர பேணுகைக்கு அரச ஆவணங்கள் மற்றும் முக்கியமான தனியார் ஆவணங்களை பெற்றுக் கொள்ளல், குறித்த சட்டங்கள், விதிகளுக்கு அமைய பாரம்பரிய மற்றும் பாரம்பரியமல்லாத அரச ஆவணங்களின் முகாமைத்துவம் மற்றும் பேணுகை, உரிய சட்டரீதியான வைப்புக்கு

பத்திரிகை மற்றும் வெளியீடுகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல், அரசாங்க நிருவாக செயன்முறையின் போது மற்றும் மக்களின் ஆராய்ச்சிக்கான வைப்பு ஆவணங்களிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள வசதி செய்வது என்பன தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தின் பிரதான பிரவுகள்

- அரசாங்க ஆவணங்களை இணைத்தல்
- கண்காட்சி
- புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளைப் பதிவு செய்தல்
- ஆவணங்களைப் பாதுகாத்தல்
- செய்தித்தாள் மைக்ரோ புகைப்படம் எடுத்தல்
- ஆவணக் கட்டடத்தின் விரிவாக்கம்
- ஆவண முகாமைத்துவ கருத்திட்டம்
- ஆராய்ச்சிப் பிரிவு
- பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

IV.

இலங்கை கலை மன்றம்

கலை நடவடிக்கைகளை மேம்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான உப குழுக்களை நியமித்து அவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல், இலக்கியம் நாடகம், இசை, நடனம் மற்றும் சித்திர உப குழுக்களின் மூலம் நாடளாவிய ரீதியில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், கலைஞர்களை தேசிய மட்ட மதிப்பீடுகளுக்குக் கொண்டுவருதல் மற்றும் அவர்களை தேசிய மட்டத்திற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் நியமிக்கப்பட்ட துறைகளில் அவர்களை உயர் மட்டங்களில் நிலை நிறுத்துதல், நுண்கலைகளின் நிலையை மேம்படுத்துதல், இலங்கையின் தனித்துவமான கலை மற்றும் கைவினைத் துறையை மேம்படுத்துதல், கலை தொடர்பான ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றுதல், நற்பண்புள்ள சமுதாயத்தை

உருவாக்கும் பொருட்டு பொருத்தமான கலாசார சூழலை உருவாக்குவது போன்றவை இங்கு முக்கியமான பணியாகும்.

1.6 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள்

கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் கண்ணோட்டம்

கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்கள் கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களாகும். இதன் கீழ் கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிற்கும் நாடக ஆய்வுக் கூடங்கள், நூல் நிலைய வசதிகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய அரங்கினை அமைக்கும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிற்கும் ‘‘கலாசார மத்திய நிலையம்’’ ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பாரம்பரியமான அவைக்காற்றுகைக் கலை மற்றும் பாரம்பரிய கலாசாரப் பிரிவுகளைப் பாதுகாத்து அதன் மூலம் வளர்க்கப்பட்ட கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் இக் கலாசாரக் கூறுகளைப் பொது மக்களிடம் கொண்டு செல்வதற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு முறையான பொறிமுறையாகும்.

கலாசார மத்திய நிலையங்களினால் வழங்கப்படும் அடிப்படைச் சேவைகள்

பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்

வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு உயர்தரக் கலைப் படைப்புக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆய்வு மற்றும் பயிற்சிகளைப் பெறக் கூடிய நிறுவனக் கட்டமைப்பாக மாற்றும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 214 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு பாட்டு, இசை வாத்தியம், நடனம் போன்ற கலைத் திறன்களைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளோர் அனைவரும் பங்கேற்கும் வகையில் தரமான நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. மேலும் விசேடமாக நாட்டுப்புறவியல் பற்றிய தகவல் சேகரிப்பு மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்கான வாய்ப்பினை வழங்குவதுடன் இவற்றிற்கு மேலதிகமாக பின்வரும் பாடநெறிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- உடரட்ட, பஹத ரட்ட, சப்ரகமுவ, பரதம், கதக் மற்றும் கிராமிய நடன பாடநெறிகள்.
- மேலத்தேய இசை மற்றும் கீழத்தேய இசை பாடநெறிகள்.
- நாடகமும் அரங்கியலும் பாடநெறி.
- ஓவியம் சிற்பம் மற்றும் செதுக்குக் கலை பாடநெறி.

- ஜோதிட பாடநெறி.
- உடல் மற்றும் மன வளர்ச்சி பாடநெறி.
- கைப்பணி உற்பத்திகள், பற்றிக் தயாரிப்பு பாடநெறி.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம், பாளி மற்றும் கலாசார மொழிகள் தொடர்பான பாடநெறிகள்.
- அங்கம்பொர கைவினைப் பாடநெறி.
- முஸ்லிம் ரபான் / கோலாட்ட நடனப் பாடநெறி.
- வெகுஜனத் தொடர்பு பாடநெறி.
- உள்நாட்டு கை வைத்திய பாடநெறி.
- சீன பாரம்பரிய தற்காப்புக் கலைப் பாடநெறி.
- அழகுக் கலை பாடநெறி.

நூலக சேவையினை வழங்குதல்

அனைத்து பிரதேச கலாசார மத்திய நிலையங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நூல் நிலையங்களின் மூலம் பாடசாலை மாணவர்களின் மற்றும் பிரதேச மக்களின் வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தை அதிகரித்தல் மற்றும் கல்வியை எளிதாக்கும் நோக்கத்துடன் இந்த சேவை செயல்ப்படுத்தப்படுகிறது. சில மத்திய நிலையங்களின் மூலம் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள கிராமப்புற சமூகங்களுக்கான நடமாடும் நூல் நிலைய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கலாசார சேவைகளை வழங்குதல்

பிரதேச மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சமய/ கலாசார விழாக்களின் தேவைகளுக்காக பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலம் கலாசார சேவைகள் வழங்கப்படுகின்றன. இதன் கீழ் ஜய மங்கள காத்தா குழுக்கள், ஹேவிசி குழுக்கள், மங்கள வாத்திய குழுக்கள், வெஸ் நடன குழுக்கள், நடன குழுக்கள், வீதி நாடகக் குழுக்கள் மற்றும் கிஹி பிரித் குழுக்கள் ஆகிய வசதிகளை வழங்குதல்.

சமய/ கலாசார/ கல்வி மற்றும் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைத்தல்.

கலாசார மத்திய நிலையம் பிரதேச ரீதியாக வருடம் முழுவதும் பல்வேறு சமய/ கலாசார/ கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களது அபிவிருத்தி நிதியில் இருந்து/ பிரதேசத்தின் நிதி உதவியுடன்/ அரச பங்களிப்புடன் பிரதேச மக்களுக்காக நடாத்தப்படுகிறது.

கலாசார மத்திய நிலைய தேசிய நடனக் குழாமினை பராமரித்து வருதல்.

கலாசார மத்திய நிலையங்களில் நுண்கலைப் பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களிடையே உயர் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ மாணவியர்கள் அடங்கிய நடனக் குழாம் பராமரிக்கப்பட்டுவருகிறது. அரச / தேசிய விழாக்களுக்காகவும் வெளிநாட்டு கலாசார சுற்றுலாவிற்காகவும் இவ் நடனக் குழாம் பங்களிப்புச் செய்கிறது.

2.1 கலாசார அலுவல்கள் பிரிவின் மூலம் 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

தொ. இல.	செலவு விடய விபரம்	2023 ஒதுக்கீடு ரூ.மி.	செலவு 2023.12.31 ஆம் திகதிக்கு ரூ.மி.	நிதி முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம்
கலாசார மத்திய நிலைய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்ப்படுத்துதல்					
01.	கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல் 101-02-05-09-1409 (112)	74.75	73.616	98%	100%
02.	இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள் 101-02-05-0-2002	5	0.12	2.4%	100%

03.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2102	10	3.047	30%	100%
04.	கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கொள்வனவு. 101-02-05-0-2103	10	1.67	16%	100%
05.	கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் 101-02-05-0-2001	20	17.19	86%	89%
06.	கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு 101-02-05-23-2104	40	8.01	20%	53%
07.	கலாசார மத்திய நிலையங்களின் சேவையணியினருக்கு பயிற்சி வழங்குதல். 101-02-05-23-2401	0.50	0.39	78%	100%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மீண்டெழும்) செயல்ப்படுத்துதல்					
07.	சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்	9.5	1.91	20%	89%

	101-02-05-09-1409(99) இதன் கீழ்.				
09.	வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டம். 101-02-05-09-1409(113)	3.24	1.83	56%	100%
விசேட கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை (மூலதன) செயல்ப்படுத்துதல்					
12.	கட்புலனாகா மரபுரிமைகளைப் பாதுகாத்தல் 101-02-05-31-2509	10	3.79	38%	69%
13.	அமரதேவ கலைக்கூடம் 101-02-05-37-2104	55	18.79	34%	68%

2.1.1 கலாசார மத்திய நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல் (101-02-05-09-1409 (112))

214 கலாசார மத்திய நிலையங்களிற்காக நுண்கலை பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்காக (09 மாதங்களுக்காக) வளவாளர்களுக்கான கொடுப்பனவுகள் இச் செலவு விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

2.1.2 இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள்
101-02-05-0-2002

தெய்யந்தர மற்றும் கொட்டபொல கலாசார மத்திய நிலையங்களின் சங்கீத மற்றும் நடன வாத்தியக் கருவிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2.1.3 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல்.
101-02-05-0-2102

வீரகட்டிய, கங்கஇகல கோரல, தெயியந்தர, மொரவெவ, தமண, சாய்ந்தமருது, கொரவ்பொத்தான, பலாகல, தமன்கடுவ, வெயாங்கொடை, கொட்டபொல மற்றும் திக்வல்ல ஆகிய கலாசார மத்திய நிலையங்களுக்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

2.1.4 கலாசார மத்திய நிலையங்களுக்கு உரிய இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களை வழங்குதல்.

101-02-05-0-2103

வலிகந்த, கணேவத்தை, சங்கராஜபுர, ரண்முத்துகல, கங்கஇகல கோரல, தமன்கடுவ, பலாகல, ரத்தொட்ட, மொரவெவ, சாய்ந்தமருது, அலபாத்த, தெய்யந்தர, வலிகம, திக்வல்ல ஆகிய 14 கலாசார மத்திய நிலையங்கள் மற்றும் வியாங்கொடை தேசிய பயிற்சி மத்திய நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

2.1.5 கலாசார மத்திய நிலைய சிறிய புதுப்பித்தல் வேலைகள், மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்களை மேற்கொள்ளுதல்.

101-02-05-0-2001

மீரிகம, பென்தொட்ட, ஆணமடுவ, மண்முனை வடக்கு, கோமரன்கடவல, ஹாரிஸ்பத்து, நாவுல, ரத்தொட்ட, புத்தளம், ருவன்வெல்ல, வீரம்புகெதர, தமன்கடுவ, சொரணாதொட்ட, கிரரந்துருகோட்டை, மத்துகம ஆகிய 15 கலாசார மத்திய நிலையங்கள் மற்றும் வியாங்கொடை தேசிய பயிற்சி மத்திய நிலையத்திற்கான சிறிய புதுப்பித்தல் வேலைகள், நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.1.6 கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-02-05-23-2104

சாய்ந்தமருது, பொல்கஹவெல, கொட்டவெகர, மஹகும்புக்கடவல மற்றும் லக்கல ஆகிய கலாசார மத்திய நிலையங்களின் நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.1.7 சமூக கலாசார ஒருங்கிணைப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

101-2-5-9-1409(99)

<u>2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்</u>

1. புத்தாண்டு சுப பத்திரிகையின் 250 பிரதிகள் அச்சிட்டமை.
2. மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் பொசோன் உற்சவத்தின் ஹேவிசி பூஜைவிற்காக நிதியுதவியினை வழங்குதல்.

3. சிதுல்பவ்வ ரஜமஹா விஹாரையின் பொசோன் உற்சவத்திற்காக நிதியுதவியினை வழங்குதல்.
4. ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் சிவமஹா கோவிலுடன் இணைந்து நடாத்தப்படும் எசல மஹாபெரஹெரவிற்கு நிதி உதவி வழங்குதல்.
5. நுவரெலியா மாவட்டத்தில் பிட்டசர கோவில் ஊர்வலத்திற்கு நிதி உதவி வழங்குதல்.
6. கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் சிவமஹா கோவிலுடன் இணைந்து நடாத்தப்படும் எசல மஹாபெரஹெரவுடன் இணைந்து மாத்தளை மாவட்டத்தில் உள்ள அம்பொக்க ஸ்ரீ பத்தினி கோவில் ஊர்வலத்திற்கு நிதி உதவி வழங்குதல்.
7. வாரண ரஜமஹா விஹாரையின் வருடாந்த ஊர்வலத்திற்கு நிதியுதவியினை வழங்குதல்.
8. சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து 08.03.2023 அன்று “செனஹச” இசை இரசனை நிகழ்ச்சியினை நடாத்துதல்.
9. 2023.06.02 அன்று தியத்த உயன திறந்த வெளிஅரங்கில் பொசோன் பக்திப் பாடல் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
10. 2023.07.30 அன்று அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் கலாசார கலை விழா டவர்ஹோலில் நடாத்தப்பட்டது.
11. 9 ஆவது கொழும்பு சர்வதேச நாடக விழா – 2023 இற்கு நிதி உதவி மற்றும் வளங்களை வழங்குதல்.
12. 2023.08.21 அன்று பைலா பாடல் கச்சேரி நடாத்தப்பட்டது. (பழைய செத்சிறிபாய கட்டடத்தின் முதல் மாடியில் உள்ள விருந்தினர் ஒன்றுகூடும் இடத்தில்)
13. 2023.11.16 அன்று கலாசார வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு விரிவுரை அமைச்சு கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. (விரிவுரையாளர் : பேராசிரியர் ஜோசப் யோகராஜா)
14. “கதை சொல்லும் மேடை” கலை மற்றும் நாடகப் பயிற்சிப் பட்டறை நடாத்துதல். 11 முதல் 18 வயது வரையிலான குழந்தைகளின் அழகியல் திறன் மற்றும் ரசனையை வளர்க்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.
    - முதல் கட்டத்தின் முதல் பட்டறை 2023.08.05 அன்று கடுவெல கலாசார மத்திய நிலையத்தில்.
    - முதல் கட்டத்தின் இரண்டாம் பட்டறை 2023.09.02 அன்று வெயாங்கொடை கலாசார மத்திய நிலையத்தில்.

- முதல் கட்டத்தின் மூன்றாம் பட்டறை 2023.10.07 அன்று கடுவெல கலாசார மத்திய நிலையத்தில்.
- முதல் கட்டத்தின் நான்காம் பட்டறை 2023.11.11 அன்று கஸ்பாவ கலாசார மத்திய நிலையத்தில்.
- இரண்டாம் கட்டத்தின் முதல் பட்டறை 2023.12.02 அன்று கடுவெல கலாசார மத்திய நிலையத்தில்.

15. கலாசார சொற்பொழிவு நிகழ்ச்சி – தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தில் நடைபெற்றது. (இது தொடர் விரிவுரை) சமூகத்தின் பண்பாட்டு வாழ்வைக் கட்டியெழுப்ப இலக்கியக் கலை மற்றும் பண்பாடு பற்றிய தரமான மற்றும் விமர்சனப் பேச்சுக்களை இன்றைய சமூகத்தில் உருவாக்கும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- முதல் விரிவுரை 2023.08.10 ஆம் திகதி நடைபெற்றது.
  தலைப்பு : உள்ளூர் கலாசாரம் மற்றும் பொதுவான மனித விழுமியங்களுக்கு இடையிலான உரையாடல்.
  விரிவுரையாளர் : பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம

- இரண்டாவது விரிவுரை 2023.08.24 ஆம் திகதி நடைபெற்றது.
  தலைப்பு : மற்றொன்றை கலாசார மயமாக்கும் திட்டம்.
  விரிவுரையாளர் : நாடகக் கலைஞர் தனஞ்சய கருணாரத்ன

- மூன்றாவது விரிவுரை 2023.09.14 ஆம் திகதி நடைபெற்றது.
  தலைப்பு : பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் இடையிலான முரண்பாடு மற்றும் ஒற்றுமை
  விரிவுரையாளர் : கலாநிதி ரவிபந்து வித்யாபதி

- நான்காவது விரிவுரை 2023.10.12 ஆம் திகதி நடைபெற்றது.
  தலைப்பு : ‘‘நெறிமுறை குழப்பம்’’ நவீன இலங்கை சமூகத்தின் கலாசார கண்ணாடியா?
  விரிவுரையாளர் : பேராசிரியர் ஜோசப் ஜோகராஜ்

- ஆறாவது விரிவுரை 2023.11.09 ஆம் திகதி நடைபெற்றது.
  தலைப்பு : உலக மயமாக்கலுக்கு பிந்தைய கட்டத்தில் கலாசார மனிதனை உருவாக்குவதன் சவால்கள்

விரிவுரையாளர் : பேராசிரியர் டியுடர் வீரசிங்க

- ஏழாவது விரிவுரை 2023.11.23 ஆம் திகதி நடைபெற்றது.

  தலைப்பு : சிறந்த சமுதாயத்திற்கான போர்க்களமாக கலாசாரம்

  விரிவுரையாளர் : கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தன

- எட்டாவது விரிவுரை 2023.12.07 ஆம் திகதி நடைபெற்றது.

  தலைப்பு : ‘‘நவீனத்துவம் மற்றும் கலாசாரம்’’

  விரிவுரையாளர் : பேராசிரியர் ஜகத் வீரசிங்க

16. சிறைச் சாலையினுள் நிகழ்ச்சித் திட்டங்களை செயல்ப்படுத்துதல். (சிறைக் கைதிகளின் இலக்கிய, கலை, கலாசார மனோபாவங்களை விருத்தி செய்து அவர்களின் ஆளுமையை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நல்லொழுக்கம் உள்ளவர்களாக சமூகமளிக்கும் நோக்கில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.)

- 2023.06.11 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையில் வெலிக்கடை சிறைச் சாலையில் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடாத்துதல்.
- 2023.07.11 ஆம் திகதி வீரவில தடுப்பு முகாமில் கச்சேரி மற்றும் கலந்துரையாடலை நடாத்துதல்.
- 2023.07.14 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையின் ஆண்கள் பிரிவில் கலாசார இசை நிகழ்ச்சியை நடாத்துதல்.
- 2023.07.21 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையின் பெண்கள் பிரிவில் புதிய படைப்புக்கள் நடன பாடநெறியை நடாத்துதல். (ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை நடைபெறும்.)
- 2023.07.28 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையின் ‘‘ஆண்கள் பிரிவில்’’ சித்திர பட்டறையை நடாத்துதல். (ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை நடைபெறும்.)
- 2023.09.13 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையில் பயிலா பாடல் கச்சேரியை நடாத்துதல்.
- 2023.11.14 ஆம் திகதி வீரவில மற்றும் அங்குணகொலபலஸ்ஸ சிறைச் சாலையில் கச்சேரி மற்றும் நிகழ்ச்சிகளை ஆரம்பித்தல்.
- 2023.12.04 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையில் சங்கீத் மற்றும் நடன கச்சேரியை நடாத்துதல்.

- 2023.12.08 ஆம் திகதி வெலிக்கடை சிறைச் சாலையில் திரைப்பட பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

17 தேசிய கலாசாரக் கொள்கையின் திருத்தம் மற்றும் செயல்த் திட்டத்தை உருவாக்குதல்.

(இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1525/12 மூலம் தேசிய கலாசாரக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அந்தக் கொள்கையை அமுல்ப்படுத்துவதிலும் தற்போது அதனை மாற்றியமைப்பதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. நவீன சிக்கலான சமூகத்திற்கு ஏற்றவாறு வரையறை மற்றும் முறையான நடைமுறைப்படுத்தல் பொறிமுறை சேர்க்கப்படாததால் இந்த சாசனத்தைத் திருத்தி தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.)

- முதல் குழுக் கூட்டத்தை 2023.02.16 ஆம் திகதி நடாத்துதல்.
- இரண்டாம் குழுக் கூட்டத்தை 2023.06.13 ஆம் திகதி நடாத்துதல்.
- மூன்றாம் குழுக் கூட்டத்தை 2023.08.03 ஆம் திகதி நடாத்துதல்.
- நான்காம் குழுக் கூட்டத்தை 2023.10.09 ஆம் திகதி நடாத்துதல்.

(கொழும்பு பல்கலைக்கழகத்தில் கொள்கையைத் திருத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது)

18. அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துதல். (அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி)

அரச ஊழியர்களின் ஆக்கத்துவமான கலை திறன்களை மதிப்பிடுவதற்காக அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டி வருடம் தோறும் ஏற்பாடு செய்யப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டியின் குறுந் திரைப்படம், குறு நாடகம், புகைப்படம் மற்றும் சித்திரம் (சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில்) படைப்புக்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டியில் விருது வழங்கல் விழா 2024.01.30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.8 வெளிநாட்டுக் கலாசார உறவுகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.
101-02-05-09-1409 (113)

Asia Dance Committee Meeting and side Events இற்காக பிரதிநிதி ஒருவரை பங்கேற்கச் செய்தல். நெதர்லாந்திற்குக் கொண்டு செல்லப்பட்ட தொல் பொருட்களை இலங்கைக்கு எடுத்து வரும் நிகழ்வு தாமரைத் தடாக திரையரங்கில் கலாசார நிகழ்ச்சிகளை நடாத்தி சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடாத்துதல். (சீனத் தூதருடன், மாலைதீவு கலாசார அமைச்சருடன், எகிப்து ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சருடன்) ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.1.9 தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
101-02-05-31-2509

முக்கியமாக இந்த செலவுத் தலைப்பின் கீழ் "பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல், அமைச்சின் நடனக் குழுவினை நிறுவுதல், மாற்றுத் திறனாளிகள் சமூகத்தின் கலாசார உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் மற்றும் அருவமான பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **"பிரதிபா" கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையிலான போட்டியினை நடாத்துதல்.**

பாரம்பரிய நடனக் கலைகளை நவீன தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் உடரட்ட, பகத்தரட்ட மற்றும் சபரகமுவ நடன மரபுகளை நவீன மாணவர் சமூகத்திற்கு புதிய முறையில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையில் நடாத்தப்படும் "பிரதிபா" கலாசார மத்திய நிலைய போட்டியினை அறிமுகப்படுத்தலாம். ஆண்டு தோறும் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் பாரம்பரிய நடனக் கலையை ஊக்குவிப்பதும் பிரச்சாரம் செய்வதும் ஆகும்.

- **நடனக் குழுவினை நிறுவுதல்.**

மாகாண மட்டத்தில் திறமையைக் காட்டும் வளர்ந்து வரும் கலைஞர்களைத் தெரிவு செய்து அமைச்சின் நடனக் குழு அமைப்பது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச கச்சேரி வாய்ப்புக்களின் மூலம் இவ் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அனுபவத்தை வழங்குதல் மற்றும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மேலும் சுற்றுலாத்

துறையுடன் இணைந்து மேடைக் காட்சிகளை வழங்குவதற்கான வாய்ப்புகளையும் அவர்களுக்கு வழங்குகிறது.

- **விழிப்புலனற்ற சமூகத்தின் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.**

ஒலிப்புத்தக மீள் உருவாக்கத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் 19 புத்தகங்களின் மீள் உருவாக்கம் நிறைவடைந்துள்ளது. (அசான் பத்தினி தேவதாவி, துப்பாக்கிச் சூடுகளின் தேசம், ஒவ்வொரு கவிதை, ஒரு சுடரின் ஒளி, நாளை சூரியன் உதிக்கும், பாதிக்கப்பட்டவன் அப்பாவி, தரையைக் கட்டும் மரங்கள், கருணே, ரச கத்தா, வெயிசெக், யக்ஷ பந்தனய, கப்புட்ட பேத், இலங்கையின் கலை வரலாறு, தீக்குளித்தவர்கள் எரிகிறார்கள், மனிதத் துவத்திற்கு சூடு வைக்கவும், கொடோ எனகங், மராசாத், கிரிஜா, கும்பலா மெட்டி பதம்கல கட்டி ஆகிய படைப்புக்கள்) இந்த ஒலிப் புத்தகங்கள் விழிப்புலனற்ற சமூகத்தினருக்கு 18.12.2023 ஆம் திகதி பிரபலப்படுத்தப்பட்டன.

2.1.10 அமரதேவ கலைக் கூடத்தினை நிறுவுதல்

101-02-05-37-2104

இந்த செலவு விடயத்தின் கீழ் அமரதேவ கலைக்கூட நிர்மாணப் பணிகள் மற்றும் அத்தியாவசிய நடவடிக்கைகள் (மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் செலுத்துதல்) தொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ந்து வரும் கலைஞர்கள் கலைத் துறையில் நுழைவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது, ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, கலைஞர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பது மற்றும் அதனை ஒரு ஸ்ரூடியோவாக பராமரிப்பது என்பன இதன் நோக்கமாகும்.

கலாசார மத்திய நிலைய நிர்மாணிப்பு தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

மாகாணம்	மாவட்டம்	பி.செ. பிரிவுகளின் எண்ணிக்கை	நிர்மாணிக்கப் பட்டுள்ள கலாசார மத்திய நிலையங்கள்	திறந்து வைக்கப்பட உள்ள கலாசார மத்திய நிலையங்கள்	நிர்மாணிக்கப் பட்டு வருகின்ற புதிய கலாசார மத்திய நிலையங்கள்
மத்திய	கண்டி	20	15	-	-

	மாத்தளை	11	11	-	-
	நுவரெலியா	05	04	-	-
கிழக்கு	அம்பாறை	20	08	03	01
	மட்டக்களப்பு	14	06	-	-
	திருகோணமலை	11	06	-	-
வட மத்திய	அநுராதபுரம்	22	13	02	-
	பொலன்னறுவை	07	06	-	-
வடக்கு	யாழ்ப்பாணம்	15	09	-	-
	கிளிநொச்சி	04	-	-	-
	மன்னார்	05	-	-	-
	முல்லைத்தீவு	06	-	-	-
	வவுனியா	04	02	-	-
வட மேல்	குருநாகல்	30	20	03	-
	புத்தளம்	16	07	02	-
சப்ரகமுவ	கேகாலை	11	09	-	-
	இரத்தினபுரி	17	08	-	01
தெற்கு	காலி	19	14	-	-
	அம்பாந்தோட்டை	12	07	-	01
	மாத்தறை	16	16	-	-
ஊவா	பதுளை	15	13	-	-
	மொனராகலை	11	07	01	-
மேல்	கொழும்பு	13	07	-	-
	கம்பஹா	13	09	01	-
	களுத்துறை	14	12	01	-
	மொத்தம்	**331**	**209**	**13**	**03**

2.2 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

தற்போதைய சமூக பொருளாதார சூழ்நிலையில் குடிமக்கள் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன, எனவே சமூகத்தில் தனிமனித அனுதாபமும் சமூக அனுதாபமும் குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இது மிக விரைவாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையாக நாங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதற்காக கலை மற்றும் கலாசார வெளிகளை விரிவுபடுத்துவதற்கும் கலாசார நுகர்வுகளை அதிகரிப்பதற்கும் தேவையான வசதிகள் மற்றும் ஊக்கங்களை வழங்குவதற்கும் அமைச்சின் அடுத்த மூன்றாண்டு திட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக பின்வரும் பகுதிகளின் கீழ் வேலைத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- இலக்கியம், அவைக்காற்றுகைக் கலை, நாடகம் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் கலாசார வெளிகளை விரிவுபடுத்துதல்.
- வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு சர்வதேச அனுபவங்களை பரிமாறிக்கொள்ள வாய்ப்புக்களை வழங்குதல்.
- தற்போதுள்ள கலைஞர் குளாத்தினை விரிவாக்கம் செய்தல்.
- ஏற்கனவே உள்ள கொள்கைகளை மதிப்பாய்வு செய்து தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்தல்.
- சர்வதேச அளவில் புகழ்பெற்ற கலைஞர்களை ஊக்குவிக்கத் தேவையான கொள்கைகளை உருவாக்குதல்.
- கலை நிறுவனங்கள், கலை – கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்.
- தனித்துவமான தேசிய பாரம்பரியங்களை அடையாளம் கண்டு அவற்றை உலக பாரம்பரிய அந்தஸ்துக்காக யுனெஸ்கோ நிறுவனத்திடம் குறிப்பிடுதல்.
- கலாசார மத்தி நிலையங்களின் வலையமைப்பை தீவிரமாக பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- சர்வதேச தரத்திற்கு உற்பத்தியை மேம்படுத்த ஒலி அரங்குகள், ஸ்ருடியோக்கள், உட்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவினருக்குக் கலாசார ரீதியாக அதிகாரம் அளித்தல் மற்றும் விளிம்பு நிலைப் பிரிவினருக்குக் கலாசார செயற்பாடுகளை அணுகச் செய்தல். (கைதிகள், போதைக்கு அடிமையானவர்கள் போன்றோர்)
- மாற்றுத் திறனாளிகள் சமூகத்தை இலக்காகக் கொண்டு கலாசார நிகழ்ச்சிகளை செயல்ப்படுத்துதல்.
- போதைப் பொருள் தடுப்புத் திட்டங்களை செயல்ப்படுத்துதல்.
- கலாசார மத்திய நிலையங்களில் தேசிய மற்றும் பிரதேச ரீதியாக நடாத்தப்படும் சிறப்புக் கலாசார நிகழ்வுகளின் அடிப்படையில் ஒரு நாட்காட்டி தயாரித்தல்.

தற்போதுள்ள சமூக சூழலில் கலாசார விழுமியங்களை உயர்த்துவதற்கான முயற்சிகள் சவாலானதாக இருக்கும் அதே வேளையில் மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களை செயல்ப்படுத்துவதற்கான செலவுகள் அதிகரித்து வருகின்றன. இருந்த போதிலும் கலாசார அலுவல்கள் பிரிவு என்ற வகையில் கலாசார மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு அதிகபட்ச பங்களிப்பைச் செய்து, கலாசார அடையாளத்தைப்

பாதுகாத்து, இலங்கை சமூகத்தில் ஒரு பண்பட்ட மனிதனை உருவாக்க நாங்கள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

<u>கலாசார அலுவல்கள் பிரிவினால் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிதியளிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்</u>

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	2024 செயல்த் திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள் / இலக்குகள்	2024 கண்ணோட்டத்திற்கு அமைவான இலக்குகள்
1.	அமரதேவ கலைக்கூட நிர்மாணிப்பு 101-02-05-37-1509	ரூ.மி. 5.00	• வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு கலை அரங்கில் நுழைவதற்கான வழிகளை வழங்குதல். • ஆராய்ச்சிகளை நடாத்துதல். • கலைஞர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை நடாத்துதல் மற்றும் அதனை ஸ்ரூடியோவாக நடாத்துதல்.
2.	வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் 101-02-05-09-1409 (099)	ரூ.மி. 19.00	சமூக கலாசார ஒருங்கிணைப் பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். • புத்தாண்டு சுபநேர சீட்டுக்களை அச்சிடுதல் மற்றும் சிங்கள, இந்து புத்தாண்டு விழா. • தேசிய வெசாக் விழாவில் கலாசார கூறுகள். • தேசிய பொசொன் பக்திப் பாடல் விழா. • பெரஹர நிகழ்வு மற்றும் வேறு விசேட நிகழ்வுகள்.

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	2024 செயல்த் திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள் / இலக்குகள்	2024 கண்ணோட்டத்திற்கு அமைவான இலக்குகள்
			அரச நிறுவனங்களில் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் போட்டியினை நடாத்துதல்.
			கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். • அமைச்சின் ஊடாக கலாசார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். • சிறைச் சாலையில் உள்ள கைதிகளின் கலைத் திறன் மற்றும் ஆளமை மேம்பாட்டுத் திட்டங்களை நடாத்துதல். • மாற்றுத் திறனாளிகள் சமூகத்திற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
3.	கலாசார மத்திய நிலையங்களை மேம்படுத்துதல். 101-02-05-23-2104	ரூ.மி. 37.00	தற்காலிகமாக வேலை செய்வதை நிறுத்தியுள்ள கலாசார மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதன் மூலம் கலாசார மத்திய நிலையங்களின் வலையமைப்பை விரிவுபடுத்துதல்.

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	2024 செயல்த் திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள் / இலக்குகள்	2024 கண்ணோட்டத்திற்கு அமைவான இலக்குகள்
4.	தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல். 101-02-05-031-2509	ரூ.மி. 42.00	• கலாசார மத்திய நிலையங் களுக்கு இடையிலான பிரதிபா போட்டி. • பிரதேச கலாசார மத்திய நிலையங்களில் நடனக் குழுவினை நிறுவுதல். • சைகை மொழித் தழுவல்களுடன் திரைப்பட விழாவை நடாத்துதல். • மாற்றுத் திறனாளிகள் சமூகத்தின் முழுப் பங்கேற்புடன் ஆய்வு நாடகத் தயாரிப்பு மற்றும் கலை விழாவினை நடாத்துதல். • நகர்ப்புற குடிசை வாசிகளுக்காக நிகழ்ச்சிகளை நடாத்துதல். • கொழும்பு நகரில் முச்சக்கர வண்டிச் சாரதிகளின் பங்கேற்புடன் திறந்த வெளி இசை மற்றும் நடனக் கச்சேரியை நடாத்துதல்.

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	2024 செயல்த் திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடுகள் / இலக்குகள்	2024 கண்ணோட்டத்திற்கு அமைவான இலக்குகள்
			• டிரான்ஸ் சமூகத்தை பெரிய சமூகத்தின் குடிமக்களாக அங்கீகரித்தல். • இலங்கையின் கலாசார பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு நிபுணத்துவம் பெற்ற வெளிநாட்டு வளவாளர்களின் பங்கேற்புடன் வதிவிட நாடகம் மற்றும் நாடகப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் நாடகத் தயாரிப்பை நடாத்துதல். • அருவமான பாரம்பரியத்தைப் பாதுகாத்தல். • விளிம்பு நிலையில் உள்ள சமூகத்தை மேம்படுத்துவதற்காக சமூக கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துதல். • தமிழ் மலையக மக்களின் கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துதல். • கலாசார முகாம் நடாத்துதல்.

மேலே உள்ள பக்கம் 67 முதல 92 வரை கொடுக்கப்பட்டுள்ள தகவல்களைச் சரிபார்த்து, மேற்கூறிய புள்ளி விபரங்களுடன் உடன்படுகின்றேன் என்று இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………

பிரதான கணக்கியல் உத்தியோகத்தர்

பெயர் - சோமரத்ன விதானபத்திரண

பதவி - செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

திகதி - 2024.02.29

அத்தியாயம் 03 – வருடத்தின் மொத்த நிதி செயல்திறன்

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ – எப்

2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற காலத்திற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று - கலாசார அலுவல்கள் பிரிவு

திருத்தியமைக் கப்பட்டவரவு செலவு ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மையான 2023	2022	
ரூபா			ரூபா	ரூபா	
	வருமான பெறுகைகள்				
	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி	2	-	-	ஏசீஏ -1
	சர்வதேச வர்த்தகம் மிதமான வரி	3	-	-	ஏசீஏ -1
	வரியில்லா வருமானம் மற்றும் பிற	4	-	-	ஏசீஏ -1
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-		
	வருமானமல்லாத பெறுகைகள்				
	திறைசேரி முற்பணம்		799,554,637	867,877,000	ஏசீஏ 3
	வைப்புகள்		2,272,702	10,747,032	ஏசீஏ -4
	முற்பணக் கணக்குகள்		36,516,967	33,441,933	ஏசீஏ -5
	வேறு முக்கிய பேரேட்டுக் கணக்குகளுக்கான பெறுகைகள்		-	-	
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**838,344,306**	**912,065,965**	
	மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ= (அ)+(ஆ)		**838,344,306**	**912,065,965**	
	திறைசேரிக்குப் பணம் அனுப்புதல் (ஈ)				
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ= (இ) - (ஈ)		**838,344,306**	**912,065,965**	
	கழி : செலவினம்				
	மீண்டெழும் செலவினம்				
613,000,000	வேதனாதிகள், சம்பளங்கள்,பிற ஊழிய நன்மைகள்	5	573,066,912	596,426,428	ஏசீஏ - 2(ii)
238,236,600	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	183,694,682	176,228,829	ஏசீஏ - 2(ii)
29,000,000	உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்	7	28,409,821	27,546,339	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினம்	9	11,000		
880,236,600	**மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)**		**785,182,415**	**800,201,596**	
	மூலதனச் செலவினம்				
40,460,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	31,428,341	18,210,249	ஏசீஏ - 2(ii)
84,200,000	மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	11	31,977,484	121,657,696	ஏசீஏ - 2(ii)
	மூலதன மாற்றல்கள்	12			ஏசீஏ - 2(ii)
-	நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	13		-	ஏசீஏ - 2(ii)
1,500,000	திறன் மேம்பாடு	14	1,181,842	777,320	ஏசீஏ - 2(ii)
10,000,000	பிற மூலதனச் செலவுகள்	15	3,793,367	8,428,341	ஏசீஏ - 2(ii)
136,160,000	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**68,381,034**	**149,073,606**	
	வைப்புக் கொடுப்பனவு		4,365,385	8,749,210	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவு		34,643,525	29,715,472	ஏசீஏ -5
	வேறு முக்கிய பேரேட்டுக் கணக்குகளுக்குப் பணம் செலுத்துதல்				
132 ஆம் ஆண்டை நிறைவு செய்தது. இலங்கையின் தேசிய மரபுரிமைகளை சட்டரீதியாக அடையாளம் காணலும் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தலும் முறையான நிர்வாகத்தை மேம்படுத்துவதும் திணைக்களத்தின் முக்கியமான பணிகளாகும். குறித்த பணிகளை எய்துக்கொள்வதற்காக, 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்லியல் (திருத்தம்) சட்டத்தால் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்யப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்ளது.

குறிக்கோள்கள்

மேற்படி செயற்பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்கின்ற சில குறிக்கோள்கள் பின்வருமாறாகும்

1. வளங்களை மேம்படுத்துதல்.
    I. மனித
    II. நிறுவனம்
2. ஒட்டுமொத்த தொல்லியல் மரிபுரிமைகளின் பாதுகாப்பு.
3. தொல்லியல் மரபுரிமைகளை ஆவணப்படுத்துதல்.
    I. தளங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள்
    II. அசையும் கலைப்பொருட்கள்
4. தொல்லியல் மரபுரிமை பற்றிய பொது மக்கள் விழிப்புணர்வை ஊக்குவித்தல்.
5. தொல்பொருள் தளங்கள்/நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் கலைப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.
6. ஆராய்ச்சி.

தொலைநோக்கு

மொத்த தொல்லியல் மரபுரிமைகளை நன்கு நிர்வகித்து அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கொடையாக வழங்குதல்

செயற்பணி

இலங்கையின் தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்தின் பொறுப்புகளை வகிக்கும் உயர்மட்ட நிறுவனமாகவும் அதன் பிரதான ஒழுங்குபடுத்தல் நிறுவனமாகவும் செயற்படல்

பிரதான பணிகள்

1. இலங்கையின் தொல்லியல் மரபுரிமைகளை அடையாளம் காணுதல்.
2. இலங்கையின் அசையும் மற்றும் அசையாத தொல்லியல் மரபுரிமைகளை ஆவணப்படுத்துதல்.

3. தொல்லியல் மரபுரிமையை ஒழுகலாறுடன் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் பேணுதல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
4. தொல்லியல் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
5. கலாச்சார சொத்து சட்டத்தைச் செயல்படுத்துதல்.
6. தொல்லியல் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்களை பொதுமக்களிடம் சமர்ப்பித்தல்.
7. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது தொல்லியல் பெறுமதியுடன் கூடிய இடங்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக, சேத மதிப்பீடு கணக்கெடுப்புகளை மேற்கொள்ளுதல்.

1.6.4 மலைநாட்டு மரபுரிமைகள் பாதுகாப்பிற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை

அறிமுகம்

2020/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "மலையக மரபுரிமை" என்ற தலைப்பில் ஒரு விடயத்தை நிறுவப்பட்டதுடன், அதன் விடயவெல்லையாக "மலையக மரபுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக 2017.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2017.08.18 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மலையக மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான இடைக்கால நியதிச்சட்ட சபை உத்தியோகபூர்வமாக 2018 மார்ச் 02 ஆம் திகதி நிறுவப்பட்டது.

தொலைநோக்கு

"மரபுரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு சுபீட்சத்தை நோக்கி"

செயற்பணி

மலையக மரபுரிமைகளுக்கு உரித்தான சமூகப் பொருளாதார கலாச்சார மரபுரிமைகளை அடையாளம் காணுதல், எதிர்கால சந்ததியினருக்கு அதனை வழங்குவதற்குப் பங்களித்தல், காலத்திற்குப் பொருத்தமான வகையில் பயன்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி ஊடாக சமூகப் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்பாடுகளைத் திட்டமிடுதல் மூலம் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

குறிக்கோள்கள்

1. மலைநாட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தலுக்கு ஏற்புடையதாக கருத்திட்டங்களை அடையாளம் காணுதல், திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் செயற்படுத்தல்.
2. வரலாற்றுத் தளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்
3. பாரம்பரிய மலையக கிராமிய பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கும் கிராமிய குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துதல்.
4. பாரம்பரிய பழைய கிராமங்களில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் உருக்கு தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
5. பாரம்பரிய தொழில்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
6. பாரம்பரிய கிராமத்தின் வளர்ச்சி.

7. பாரம்பரிய கலைகள் மற்றும் கலைஞர்களின் ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பலை ஏற்படுத்தல்

பிரதான பணிகள்

1. மலையக மரபுரிமைகள் அதிகாரச் சட்டத்தின் வரைவு மற்றும் பாராளுமன்றத்தில் அங்கிகரித்துக்கொள்ளுதல்
2. மலையக மரபுரிமைகள் அதிகாரப் பிரதேசத்தின் மக்களது பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
3. வரலாற்று தளங்களின் மறுசீரமைப்பு மற்றும் பாரம்பரிய கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள், மலையகத்தில் அழிந்து காணப்படும் விகாரைகள், கோவில்கள் மற்றும் பன்சலைகள் என்பவற்றை புனரமைத்தல்
4. பாரம்பரிய மலையக நடனங்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாத்தல்
5. பாரம்பரிய பழைய கிராமங்களில் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் உருக்கு தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
6. மலையக பாரம்பரிய ஆடைகள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்துறையினரைப் பாதுகாத்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளை வழங்குதல்
7. லாக்ஷா தொழில், தளவாடங்களின் தயாரிப்புகள், மூங்கிள், பருத்தி மற்றும் ஆளி பொருட்களின் உற்பத்தி நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளை பாதுகாத்தல், சந்தையினை வலுப்படுத்தல்.

1.6.5 அபே கம

அறிமுகம்

கொழும்பு மாவட்டத்தின் பத்தரமுல்ல, பெலவத்தை பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 13 ஏக்கர், 03 மரங்கள், 25.1 பேர்ச்சஸ்களில் அபே கம கண்காட்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இது மத்திய கலாச்சார நிதியத்தின் திட்டமாக ஆரம்பம் தொடக்கம் நிருவகிக்கப்பட்ட போதும், 2187/27 ஆம் இலக்க மற்றும் 2020.08.09 ஆம் திகதிய மற்றும் 2202/25 ஆம் இலக்க 2020.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிமூலம் இந்த அமைச்சகத்தின் வரம்புக்கு மாற்றப்பட்டது. 2021.04.01 முதல் தேசிய மரபுரிமை, அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கியது. அதன் பின்னர் 22.07.2022 தேதியிட்ட 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம், மீண்டும் புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

தொலைநோக்கு

இலங்கையில் தரமான உள்நாட்டு பொருட்களை விற்பனை செய்வதில் முதன்மையாளராக செயற்படல்

செயற்பணி

அனைத்து வகையான உள்ளூர் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரம் பாதுகாக்கும் வகையில் சந்தைப்படுத்தலின் ஊடாக, வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் சமூக பொறுப்பு வாய்ந்த ஒரு முன்னணி தொழில்முயற்சியாதல்

குறிக்கோள்கள்

1. அபே கம வளாகத்தை முழுவதுமாகவோ அல்லது தனியாகவோ வாடகைக்கு விடல்
2. பழமையான கிராமத்தை பார்வையிடுவதற்கு வாய்ப்பு வழங்குதல்.
3. பாரம்பரிய உள்ளூர் உணவுகளை சந்தைப்படுத்துதல்
4. பாரம்பரிய கைவினைப் பொருட்களின் சந்தைப்படுத்தல்
5. உள்ளூர் கலாச்சார அம்சங்களை உள்ளடக்கிய சேவைகளை வழங்குதல்
6. புதிய சூழலை அனுபவிப்பதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்
7. பாரம்பரிய கைவினை முறைகளின் செயல்விளக்கம்
8. கல்வி சேவைகளை வழங்குதல்

1.6.6 தேசிய அருங்கலைகளின் கலை நிலையம் (தாமரைத் தடாகம்)

அறிமுகம்

இலங்கை அருங்கலைகள் தொடர்பில் சுமார் 2500 ஆண்டுகால வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்ற அருங்கலைகள், பிராந்திய மற்றும் தோற்றங்களின் அடிப்படையில் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இது பண்டைய காலம் முழுவதும் அரச ஆதரவைப் பெற்றுள்ளது. அருங்கலைகள் துறையின் முன்னேற்றத்திற்கு அரசின் ஆதரவு அவசியம். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு இலங்கை அரசாங்கம் அருங்கலைகள் நிலையத்தை நிறுவுகிறது. இது இலங்கை கலைஞர்கள் பல வருடங்களாக கண்ட கனவாகும். தற்போது நனவாகியுள்ள இக்கனவு இலங்கைவாழ் மக்களின் கலை கலாசாரத்தை போற்றுவதற்கு மிகவும் பொருத்தமான இடமாக அமையும். இந்த திரையரங்கம், பல்வேறு இனக்குழுக்கள் உள்ளூர் கலை நிகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான புகலிடமாக திகழ்கின்றது.

தொலைநோக்கு

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் அருங்கலைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்காக அருங்கலைகளின் படைப்பாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் உயர்தரத்திலான அருங்கலைகள் தொடர்பான கலை அனுபவங்களைப் பெறுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்கு வசதிகளை வழங்குதல்.

செயற்பணி

இலங்கையின் அருங்கலைகள் தொடர்பான எண்ணக்கருவை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அருங்கலைகள் துறையின் மேம்பாட்டிற்காக அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், அருங்கலைகள் துறையின் முன்னேற்றத்திற்காக சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்தல்

1.6.7 மஹிந்த இராஜபக்ஷ தேசிய டெலி சினிமா பூங்கா

அறிமுகம்

இந்த மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமா பூங்கா திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் டெலி சினிமா துறைக்கு தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான படப்பிடிப்பு பூங்காவாக நிருமாணிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் முதல் கட்டம் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதியன்று அதிகாரப் பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இலங்கையின் கலைத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட இந்த பூங்காவிற்கு தேவையான ஆரம்ப நிதியானது, வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு உரையாடல்களை பதிவு செய்யபட்டதன் பின்னர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட தொலைகாட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வரிப்பணத்தால் பெறப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்களுக்கு கலையகங்கள், காட்சி பின்னணிகள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதன் மூலம், இந்த நாட்டின் டெலி சினிமா தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய பணியாக அரசாங்கத்தால் இதனை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலும் அந்த தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த பூங்கா நிறுவப்பட்டது.

தொலைநோக்கு

கலையால் வளர்க்கப்பட்ட சமூகம்

செயற்பணி

மக்கள் நேயத்துடன்கூடிய அபிவிருத்திக்கு நெகிழ்வான, சகல கலைகளிலும் வளர்ச்சியடைந்த கலாச்சாரத்தை எதிர்கால சந்ததியினறுக்கு வழங்குதல்

குறிக்கோள்கள்

1. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சினிமா மற்றும் டெலி சினிமா படைப்பாளர்களிடம் திரையரங்குகள், காட்சி பின்னணிகள் மற்றும் தங்குமிடங்கள் போன்ற வசதிகளை வழங்கி டெலி சினிமா தொழிலில் மேம்பாட்டுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. தேசிய டெலி சினிமா பூங்காவை பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவு, பொழுதுபோக்கு மற்றும் அனுபவத்தை வழங்கக்கூடிய இடமாக செயற்படுதல்.
3. இலங்கையின் கலை, கலாச்சாரம், நாடகக் கலை, சினிமா, டெலி தயாரிப்புகள், வணிகத் தயாரிப்புகள், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் ஒளிபரப்புவதற்கு கருதுகின்ற எந்தவொரு வகையிலுமான கலை தயாரிப்புகளையும் மேம்படுத்துதல்.

4. நிறுவனத்தால் வழங்கப்படும் இடங்களை பயன்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைஞர்களும் தயாரிப்பாளர்களும் மேற்கொள்கின்ற சினிமா, நாடகம், றெலி படைப்புகள், வர்த்தக தயாரிப்புகள் போன்ற துறைகளில் தயாரிப்புகளை மேம்படுத்துதல்
5. கலை மற்றும் வர்த்தக தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி மற்றும் கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்பம், தொழில்நுட்ப அறிவு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் விநியோகத்திற்காக நிறுவனத்தின் தற்போதைய வளங்களைப் பயன்படுத்தி வசதிகளை அளித்தல்
6. மேலே கூறப்பட்ட நோக்கங்களை செயல்படுத்தவும் பாதுகாக்கவும் பூங்காவின் வளங்களை சிறந்த வகையில் பராமரித்தல் மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்தல்.

பிரதான பணிகள்

1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி படைப்புகளுக்கு தேவையான காட்சி பின்னணி வசதிகள், தரத்துடன் கூடிய தங்குமிட வசதிகள் மற்றும் கலையக வசதிகளை வழங்குவதன் மூலம் வருமானத்தை ஈட்டுதல்.
2. பார்வையாளர்களுக்கு நுழைவுச் சீட்டுகளை வழங்குதல், உள்ளக சுற்றுலாக்களின் பொருட்டு கொல்ப் கார்ட் வண்டி வசதிகளை வழங்குவதன் மூலம் வருமானம் உற்பத்தி செய்தல்
3. விரிவுரை மண்டப வசதிகளை வழங்குதல்.
4. வர்த்தக தயாரிப்புகள், திருமணத்திற்கு முந்தைய புகைப்படப்பிடிப்புகள் மற்றும் வீடியோக்களுக்கான பின்னணி காட்சிகளை வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுதல்.

1.6.8 டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளை

தொலைநோக்கு

இலங்கையின் தேசிய நாடக நிலையமாக உருவாகி, தரமான நாடக மற்றும் நாடக கலை கலாச்சாரத்தை உருவாக்குவதில் முன்னோடி நிறுவனமாக செயற்படல்

செயற்பணி

இலங்கையில் தரமான நாடக மற்றும் நாடக கலை கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிப்பு வழங்குதல், அதற்கு தேவையான அறிவு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், நவீன உலகளாவிய நாடக மற்றும் நாடக கலை பயன்பாட்டில் புதிய அனுபவம், தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பெறுவதற்குத் தேவையான புதிய பாதைகளை உருவாக்குதல், நாடகம் மற்றும் நாடக கலாச்சார ஆக்கப்படைப்பாளர்களை ஊக்குவிக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காகவும் மனித குலத்தின் நலனுக்காகவும் அவர்களைப் படைப்பாற்றலில் ஈடுபடத் தூண்டுவித்தல்.

குறிக்கோள்கள்

1. தரமான நாடகம் மற்றும் நாடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களித்தல்.
2. நூற்றாண்டை நிறைவு செய்துள்ள டவர் ஹோல் அறக்கட்டளையை இலங்கை நாடக கலையில் தேசிய அடையாளமாக தாபித்தல்.
3. உலகளாவிய ரீதியில் இலங்கையை ஒரு முக்கிய மையமாக உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்குவதற்காக தேசிய நாடகம் மற்றும் நாடக கலை துறையின் மேம்பாட்டுக்கு தேவையான கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை முழுநேர காலத்திற்கு வழங்கும், முழுமையான நாடக மற்றும் நாடகக் கலை பாடசாலையை தாபித்து அதன்மூலம் அந்த துறையில் நிபுணர்களை உருவாக்குதல்.
4. தலைநகரத்தில் போன்று வெளியிலும் நாடகங்களை பார்வையிடும் பார்வையாளர்கள், இணையான வகையில் ரசிப்பதற்கு ஏற்ற வகையில், நவீனத் தேவைகளுக்கு பொருந்துகின்றவாறு நாடு முழுவதும் நவீனமயப்படுத்திய திரையரங்குகளின் வலையமைப்பை நிறுவுதல்.
5. சிறந்த வகையிலான நாடகக் கலைஞர்களுக்கு உயர்தர நாடகங்களைத் தயாரித்து, காட்சிப்படுத்த நிதியுதவி மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
6. இலங்கையின் பாரம்பரிய உள்ளூர் நாடக கலையில் பாதுகாக்கப்பட வேண்டிய படைப்பாளிகளின் ஆக்கப்பூர்வமான பாகங்கள், உடைகள், உபகரணங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் அந்த வடிவமைப்பாளர்களின் தகவல்கள், நினைவுப் பொருட்கள், அவர்களின் படைப்புகளை திரட்டியுள்ள குறுந்தகடுகள், நாடாக்கள், இலத்திரனியல் மற்றும் புலனாகாத மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.
7. நாடகம் மற்றும் நாடகக் கலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, அவர்களின் ஆக்கப்பூர்வமான பணிகளில் விரிவான பணிகளைச் செய்த மூத்த கலைஞர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்குதல், அவர்களை வயதாகும்போது கவனித்துக் கொள்ளுதல், அவர்களை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் பராமரிப்பு சேவைகளை மேற்கொள்ளுதல்
8. சர்வதேச நாடக நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக, குறித்த நிறுவனம் மற்றும் பிற நாடுகளுடன் சர்வதேச உறவுகளைப் பேணுவது மட்டுமல்லாது நாடகம் மற்றும் நாடகத ˙துறையின் புதிய போக்குகள் மற்றும் அது தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் எமது படைப்பாளர்களை ஊக்குவித்தல்.
9. நாடகம் மற்றும் நாடக கலையில் உள்ள படைப்பாளர்களின் கேந்திரமாக தேசிய நாடக நூலகம், தேசிய நாடக அருங்காட்சியகம், தேசிய நாடகக் காப்பகம், பயிற்றுவிப்புகள்

மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அறிவைப் பரப்புவதற்காக தகைமைகளைக் கொண்டுள்ள தேசிய நாடக நிலையமொன்றை உருவாக்குதல்.

10. நாடகம் மற்றும் நாடகக் கலை அனைத்து மக்களினதும் நல்லிணக்கத்தைப் பேணும் கருவியாக பயன்படுத்தி இலங்கையின் மனித வளத்தை அறிவார்ந்த மக்களாக அபிவிருத்தி செய்வதற்கு பங்களித்தல்.

அத்தியாயம் 02

முன்னேற்றமும் எதிர்கால நோக்குகையும்

தேசிய மரபுரிமை பிரிவின் விசேட அடைவுகள் - 2023 ஆம் ஆண்டு

2.1 தேசிய மரபுரிமை பிரிவால் செயற்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்.....

தேசிய மரபுரிமை பிரிவின் பொறுப்பு யாதெனில், "தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை தரத்தில் உயர்ந்ததாகப் பேணிச் செல்வதற்கு உரிய அந்தந்த சட்டதிட்டங்களுக்கும் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கும் இணங்க கலாச்சாரம், தேசிய மரபுரிமைகள், அருங்கலை, கிராமிய கலை என்பவற்றின் ஊக்குவிப்பு விவகாரங்கள் சம்பந்தமான கொள்கைகளை ஆக்குவதற்கு உதவுவது, தேசிய வரவுசெலவுத்திட்டம், தேசிய முதலீட்டுத் திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்பவற்றின் கீழ் காணப்படும் கருத் திட்டங்களை செயற்படுத்தலாகும். பல நிகழ்ச்சித் திட்டங்களும் பல கருத் திட்டங்களும் நேரடியாக தேசிய மரபுரிமை பிரிவால் செயற்படுத்தப்படுகிறது. 2023 ஆம் ஆண்டின் நிமித்தம் ஒதுக்கப்பட்டிருந்த மிக மட்டுப்பட்டளவான நிதியேற்பாடுகளை உச்ச விளைத்திறன் வாய்ந்ததாகப் பயன்படுத்தப்பட்டது.

❖ **ஆதிவாசிகள்/ விஷேட தனித்துவ அடையாளம் உடைய மக்களை பாதுகாப்பதற்கான சேவைகளை நடாத்துதல்......**

ஆதிவாசிகளுக்கான பாதுகாப்பு சேவைகள் பெரும்பாலும் இயற்கை வளங்கள் மற்றும் உயிரியல் பல்வகைத் தன்மை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுவதுடன், உள்நாட்டு அறிவு, பெறுமதி மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் ஒத்துழைப்புடன்கூடிய முயற்சிகள் உள்ளடங்கும்.

இலங்கையில் வாழ்கின்ற ஆதிவாசி/விசேட தனித்துவமுள்ள மக்களுக்காக நாம் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றையும் நாம் புரிந்துக்கொண்டுள்ளோம். அதன்படி அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. தம்பான ஆதிவாசி கிராமத்தில் உலக ஆதிவாசி தினம் கொண்டாடுதல் மற்றும் வருடாந்த ஹெத்ம சாந்தி நடாத்தல்
2. தளதா மாலிகையின் தேன்பாணி பூஜை

3. ஆதிவாசி சமூக பாதுகாப்பு நடவடிக்கை சேவைகளுக்காக தளுகான ஆதிவாசி கிராமத்தில் கள கற்கை சுற்றுலா மூலம் ஆண்மீக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
4. ஆதிவாசிகள் பொருட்டு மரபுரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆதிவாசி சமூக பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காக பாஹியன்கல மானிட எலும்புக் கூடுகளை பாதுகாப்பதற்காக வெப்பமாணி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு பெறுகை செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டம் பொருட்டு ரூபா.மில்லியன் 7.6 ஆன ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆதிவாசி மற்றும் தனித்துவ அடையாளங்களைக் கொண்டுள்ள மக்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் திருப்திகரமான மக்கள் சமூகமாக மாற்றுதல் இதன் அடிப்படை நோக்கமாகும்.

உலக ஆதிவாசி தினம் கொண்டாடுதல்

தளுகான சமூக உயீரூட்டல் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளுதல் மற்றும் பாடசாலை பிள்ளைகளுக்கு உபகரணங்களை வழங்குதல்

ஹெனானிகல ஆதிவாசி சம்பிரதாய ஹெத்ம சாந்தி கர்மய நடாத்தல் - 2023

❖ தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்துதல்.......

தேசிய மரபுரிமை பிரிவின் மனித வளங்கள் அபிவிருத்தி பொருட்டு பதவியணியின் ஆற்றல்களை விருத்தி செய்தல், ஆற்றல் அபிவிருத்தி, தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தல், சவால்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் குழு ஆற்றல்களை மேம்படுத்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு செய்முறை செயற்பாடுகள் உள்ளடக்கிய இரண்ட நாட்களிலான பயிற்சி செயலமர்வு இலங்கை கடற்படையின் வளப்பகிர்வுடன் ரன்மிஹிதென்ன வளாகத்தில் நடைபெற்றது.

❖ கலைஞர்கள் தொடர்பான அவசர விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டம்....

இந்த நாட்டில் கலைத் துறையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பல வகை கலைஞர்களுக்கு நிரந்தர வருமான வழிகள் கிடையாது. அநேகமான கலைஞர்கள் அவர்களின் ஜீவனோபாயத்தை மிகவும் கஷ்டமான முறையில் சமாளித்துக் கொள்கின்றனர். ஆயினும் சில கலைஞர்கள் நீண்ட காலமாக தமது வாழ்க்கையில் ஏற்படும் பாதுகாப்பற்ற நிலைமை மத்தியிலும் கலைக்காக பாரிய கடமைப்பொறுப்புகளை ஆற்றுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அத்தகைய சூழலில் கலைதுறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் கலைஞர்கள் கலையின் மீது காட்டுகின்ற ஆர்வம் குறைவடைதலானது கலை துறைக்கு ஏற்படும் பாரிய நட்டமாகும். ஏனெனில் இந்த நாட்டின் கலாச்சாரம் மற்றும் கலைகளுக்கிடையில் காணப்படும் பரஸ்பர உறவுக்காக அது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்தகைய ஒரு நிலையிலுள்ள இந்த கலைஞர்கள் நிமித்தம் திடீர் விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தற்போது ஒரு அத்தியாவசிய தேவையாகும். இந்த நாட்டின் மொத்த சனத் தொகையில் அரச மற்றும் தனியார் துறை சேவைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்தியிருப்பினும், கலைஞர்களுக்காக புறம்பான

காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக கலைஞர்களின் பொருட்டு திடீர் விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தல் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் பெப்ருவரி மாதம் தொடக்கம் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை ஓராண்டு காலப்பகுதிக்கு நலன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதி பயன்பெறுநர்களின் பொருட்டு ஒட்டு மொத்தமாளக ரூபா. 4511879.47 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது.

❖ 2023 தேசிய மரபுரிமை பிரிவின் மிகவிசேடமான கொள்கை முறையிலான தீர்மானங்கள்...

தொடர் இலக்கம்	**கொள்கை முறையிலான தீர்மானங்கள்/ அமைச்சரவை தீர்மானங்கள்**	**முன்னேற்றம்**
01	மகிந்த ராஜபக்ஷ றெலி சினமா பூங்கா அரச – தனியார் கூட்டுடைமை முறைமையின் கீழ் முகாமைத்துவம் செய்தல். MBRCA/CA/CP/2023/03 2023.02.09	இப்பத்திரம் தனியார் கூட்டுடைமையுடன் தேசிய முகவர் நிறுவனத்திடம் அமைச்சரவையால் முன்வைக்கப்பட்டதன் பின்னர், குறித்த நிறுவனத்தின் பரிந்துரைகளை அடிப்படையாகக்கொணடு அமைச்சரவையால் அந்தப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதுடன், தற்போது அந்தப் பணிக்காக பெறுகை செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
02	மகிந்த ராஜபக்ஷ தேசய அருங்கலைகள் நிலையத்தின் (நெளும் பொக்குண கலையரங்கம்) முகாமைத்துவத்தை முறைசார்படுத்தல் மற்றும் சேவை வழங்குதல் பொருட்டு அறவிடப்படும் கட்டணங்களை திருத்தம் செய்தல். MBRCA/CA/CP/2022/37 2023.02.22	அப/23/0452/620/012 மற்றும் 2023.03.28 மகிந்த ராஜபக்ஷ தேசிய அருங்கலைகள் நிலையம் அரச – தனியார் கூட்டாண்மை அடிப்படையில் பொதுதிறைசேரிக்கு செலவில்லாது பராமரித்தல் தொடர்பில் அரச – தனியார் கூட்டாண்மை தேசிய முகவர் நிறுவனத்தை உசாவி பொருத்தமான முறைமையொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்

03	மகிந்த ராஜபக்ஷ தேசிய அருங்கலைகள் நிலையம் (நெளும் பொக்குண கலையகம்) அரச -தனியார் கூட்டாண்மை முறையின் கீழ் முகாமைத்துவம் செய்தல். MBRCA/CA/CP/2023/17 2023.04.18	அப/23/0756/620/012-I மற்றும் 2023.05.16 ஆம் திகதிய சனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கமைவாக சனாதிபதி செயலாளரால் அஜித த சொயிஸா அவர்களின் தலைமைத்துவத்தில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் பரிந்துரைகளுடன் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை கவனத்தில் கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
04	1980 ஆம் ஆண்டு 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டம் திருத்தம் செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல். MBRCA/CA/CP/2023/18 2023.04.27	அப/23/0841/620/025 மற்றும் 2023.05.16 ஆம் திகதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
05	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய தொல்லியல் கொள்கை திருத்தம் செய்தல். MBRCA/CA/CP/2023/28 2023.07.14	அப/23/1308/620/037 மற்றும் 2023.08.01 ஆம் திகதியில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி, அமைச்சரவை பத்திரத்தில் உத்தேச குழுவின் கடமைப் பொறுப்புகளை அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பான மேலதிக தகவல்களை அமைச்சரவையிடம் சமர்ப்பிப்பதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சருக்கு முடியுமான வகையில் இவ்விடயம் தற்போது பிற்போடப்பட்டுள்ளது. அதன்படி தேவையான நடவடிக்கைகளின் பொருட்டு உரிய அதிகாரிகளிடம் இது தொடர்பில் உடனடியாக அறிவிப்பதற்கு அமைச்சரவையின் செயலாளரிடம் அதிகாரம் கையளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06	அநுராதபுரம் மகா விகாரை நிலத்தின் அகழ்வுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள். MBRCA/CA/CP/2023/25 2023.07.19	அப/23/1350/620/038 மற்றும் 2023.08.08 ஆம் திகதிய நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் அவர்களின் அவதானிப்புகளில் இரண்டாவது மற்றும் மூன்றாவது பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் மீத உரிய கவனம் செலுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளுடன் மேலும் கலந்துரையாடி, பத்திரத்தில் 03 ஆவது பந்தியின் கீழ் காணப்படும் பிரேரணைகளின் முன்னுரிமைகள், ஒவ்வொரு பிரேரணைகளை செயற்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் அதற்கான காலவெல்லைகளை அடையாளம் காணப்பட்டு இவ்விடயம் தொடர்பில் புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சர் அவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
07	1940 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க தொல்லியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1998 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க தொல்லியல் (திருத்தச்) சட்டம் திருத்தம் செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் MBRCA/CA/CP/2023/09 2023.10.06.	அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
08	மகிந்த ராஜபக்ஷ தேசிய அருங்கலைகள் நிலையம் (நெளும் பொக்குண கலையரங்கம்) ஒதுக்கதல் மற்றும் விலை கணக்குகளை திருத்தம் செய்தல். MBRCA/CA/CP/2023/33 2023.10.23	23/20330/620/012-II மற்றும் 2023.10.31 ஆம் திகதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
09	உணவட்டுன நீரக்கு அடியிலான கலையகம் தாபித்தல் (இணைந்த அமைச்சரவை குறிப்பு) MT/2023/05	அபஇ/23/0715/615/032 மற்றும் 2023.05.30 ஆம் திகதியில் உத்தேச கருத்திட்டம் மத்திய கலாச்சார நிதியம் மற்றும் தனியார் முதலீட்டு கம்பெனிகளுக்கிடையில் அரச – தனியார் கூட்டுறவாக பராமரிப்பதற்கு ஆளுகைச் சபையின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளுதல் மற்றும் உணவட்டுன கடல் கரைக்குப் பதிலாக வேறு பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

❖ கிராமோதய ஜனகலா கேந்திரம்

(01) கற்கைநெறி அபிவிருத்தி மற்றும் புதிய கற்கைநெறிகளை பராமரித்தல்

I. தேசிய திறன் மட்டத்தின பெற்றுக்களொள்ளுதல்

- சித்திரம் NVQ 04 - 2023 ஆண்டில் செல்லுபடியாக்கப்பட்டள்ளது. எமது நிறுவனம் அங்கிகாரம் பெற்றுக்கொண்டுள்ளது.
- சங்கீதம் NVQ 05 - செல்லுபடியாகியுள்ளது. அங்கீகாரம் பெறுதல் வேண்டும்.
- சிற்பம் NVQ 04 - செல்லுபடியாகியுள்ளது. அங்கீகாரம் பெறுவதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

I. தேசிய திறன் கற்கைநெறிக்காக வெளியக வளப்பகிர்வாளர்களை பெற்றுக்கொள்ளுதல்

1.நடனம் (கத்தகலி, மனிபுரி, தாளவாத்தியம், வெளிநாட்டு தாளவாத்தியம்)

2.சங்கீதம் (வாத்தியம்)

II. குறுகியகால கற்கைநெறி

- பன்சலை சித்திரங்களை பாதுகாக்கும் கற்கைநெறி - தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்கின்ற கருத்திட்டமாகும்.

111 வெளியக செயற்பாடுகள்



- 2023.03.17 – மீயுரங்கனா இசை நிகழ்ச்சி – அபேகம வளாகம்

2023.04.22 – வசத்சிறிய புத்தாண்டு வைபவம்

2023.04.17 கொளம்பகம பக்மஹ வைபவம் - WatersEage

- 2023.06.22- சீன கலாச்சார இசை நிகழ்ச்சி – நெளும் பொக்குண கலையரங்கம்

- 2023.1.03 –கராயகும சாந்திகர்ம மற்றும தேவதானம் - அபேகம வளாகம

❖ தொல்லியல் திணைக்களம்

இலங்கை தொல்பொருள் மரபுரிமைகள் பாதுகாத்தலை அடிப்படையாகக்கொண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 37 தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆய்வு, அகழ்வு மற்றும் ஆராய்ச்சி திட்டங்களும், 87 பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு திட்டங்களும், ஊக்குவிப்பு மற்றும் பொது கண்காட்சியின் கீழ் 40 திட்டங்களும், ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காம் காலாண்டுகளில் செயல்படுத்தப்பட்டு திணைக்களம் கவனிக்கத்தக்க கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றி 2023 இல் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் 76% ஆன ஒட்டுமொத்த பௌதீக செயல்திறனை அடைந்துக்கொள்வதற்கு இயன்றைமையானது, தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

தொல்லியல் திணைக்களம் மூலம் வெளியிடப்பட்ட தொல்லியல் பாதுகாப்பு நினைவுச்சின்னங்களின் எண்ணிக்கை 2,793 மற்றும் தொல்லியல் இருப்புக்களின் எண்ணிக்கை 136 ஆகும். 2023 ஆம் ஆண்டில் 06 தொல்பொருள் இருப்புக்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் நாயகங்களின் இடமாற்றம் மற்றும் தொல்லியல் காப்பொதுக்கங்களை வெளியிடுவதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் குறித்த 06 தொல்லியல் காப்பொதுக்கங்களை 2023 இல் வர்த்தமானியில் வெளியிடுவதற்க முடியவில்லை.

2023 ஆம் ஆண்டில், தொல்லியல் அழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்துகையில், 299 சட்டவிரோத அகழ்வாராய்ச்சிகள், 116 தொல்பொருட்கள் அழிவுகள், 129 தொல்பொருட்கள் திருட்டுகள் மற்றும் 04 சம்பவங்கள் தொடர்பான பதிவுகள் உள்ளன.

2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக திணைக்களத்தின் வருவாய் சேகரிப்பு தொடர்பான செயல்திறனைப் பகுப்பாய்வு செய்கையில், விற்பனை மற்றும் கட்டணங்கள், நீதிமன்ற அபராதங்கள், சுற்றுலா பங்களாக்கள்/விடுதிகள், முற்பண B கணக்கு, பொது வருவாய் மற்றும் பிற/ஏனைய வருவாய் ஆதாரங்களின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபா.144,369,487.54 ஆவதுடன். அதில் நீதிமன்ற அபராதம் ரூபா.24,477,000.00 ஆகும்.

பொலன்னருவ திவங்க பிளிமகே வெலி

கண்டி ரஜவாசலையில் பாதுகாப்பு பணிகள

தூண்களின் பாதகாப்பு

வெளிப்புற மதில்களின் பாதுகாப்பு

அநுராதபுரம் தெற்கு தாகப முடுவரிய தயாரித்தல்

பல்லம புதிய வங்து விகாரை பாதுகாப்பு



அம்புலுகம தன்தபாய விகாரை பாதுகாப்பு

நீலகிரி தூபியின் அகழ்வு

கூரகல அகழ்வு கருத்திட்டம்

மாத்தறை ஹித்தெட்டிய ரஜமகா விகாரையின் ஓவியங்களையும் சிற்பங்களையும் பாதுகாத்தல்

பதுளை மீகஹஎல்ல சுதர்ஷனாராமய சிற்பங்களின் பாதுகாப்பு

களுத்துறை மத்துகம பான்திய கனேபூராண விகாரையின் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் பாதுகாப்பு



களனிய ரஜமகா விகாரையின் ஓவியங்களது பாதுகாப்பு

அந்தரவெவ புலாண விகாரை பாதுகாப்பு





காலி ஹிக்கடுவ குமாரகந்த குமார மகா விகாரை ஓவியங்களின் பாதுகாப்பு

பதுலை கனேதென்ன புராண விகாரையின் சிற்பங்கள் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் பாதுகாப்பு





2023 ம் ஆண்டில் தொல்லியல் மாநாடு நிகழ்நிலை முறையின் ஊடாக நடாத்தப்பட்டதுடன், ஆய்வு பத்திரம் சமர்ப்பித்தல் மற்றும் இணையவழியின் ஊடாக வெளியிடப்பட்டது.

அறிவுறுத்தும் போதனைகளை நடாத்தல் - அநுராதபுரம் பிரதேச செயலகம்

சங்கபால, பனஹகடுவ, மிரிஸ்வல்பொத்தை மற்றும் ஹுந்தகிரிய தொல்லியல் நிலத்தின் ஆய்வு பணிகளை மேற்கொள்ளுதல்.



கல்வெட்டுகள் மற்றும் நாணயவியல் தரவுகளுடன் கூடிய இடங்களின் பரிசோதனை மற்றும் பதிவு செய்தல்

பனையோலை புத்தகங்களை குறியிடப்பட்டு அட்டவணைப்படுத்தல் மற்றும் டிஜிரல்மயப்படுத்தல் - திவுலபிட்டிய, யட்டகம, ஸ்ரீ நாகவனாராமய





நாணயங்களை அட்டவணைப்படுத்தல் மற்றும் குறியடப்பட்ட நாணயங்களை இணையத்தள தரவு முறைமையில் விடுவித்தல்

நாடு முழுவதும் உள்ள நூலகங்களை பராமரித்தல்

கோட்டே நூலகம்

வவுனியா நூலகம்



புதுருவகல நூலகம்



யாழ்ப்பாணம் நூலகம்

❖ அபே கம

அபே கம வளாகத்தில் கடந்த வருமான அறிக்கைகளை ஆராய்ந்த பின்னர், 2022 ஆம் ஆண்டில் வருடாந்த வருமானம் ரூபா.11,270,125.00 ம், 2023 ஆம் ஆண்டில் வருடாந்த வருமானம் ரூபா. 13,322,550.00 ம் ஆகும். அதன்படி, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் ரூபா. 2,052,425.00 ஆன அதிகரிப்பு காட்டப்பட்டுள்ளதுடன், சதவீதமாக 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20% ஆன முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

வெளியக
கலையரங்கங்களின்
பழுதுபார்த்தல்.

நாடு முழுவதும் உள்ள
கல்வெட்டுகளை பிரதிப்பன்னல்

❖ மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினமா பூங்கா

1. **உள்நாட்டு வெளிநாட்டு ரெலி சினமா உருவாக்கம் பொருட்டு தேவையான காட்சி பின்னணிகளையும் வதிவிடங்களையும் னவழங்குதல்**

மகிந்த ராஜபக்ஷ தேசிய டெலிசினிமா பூங்காவானது டெலிசினிமா துறையின் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைஞர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகள் மற்றும் காட்சிப் பின்னணிகளை மிகவும் மலிவு விலையில் மற்றும் தடையின்றி வழங்குதல் மகிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினமா பூங்காவின் ஊடாக எதிர்பார்க்கும் பிரதான பணியாகும். 235 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட இந்த பூங்கா, நகர்ப்புற பின்னணி, கிராம பகுதி, ஏரி பகுதி, 100 அடி நீளமான பச்சை திரை கொண்ட பெரிய ஸ்டுடியோ, பணியிட கட்டிடம், பின்னணி கட்டுமானத்திற்கான வெற்று நிலம் போன்றவற்றை கொண்டமைந்துள்ளது.

குறிப்பிடப்பட்ட காட்சிகளுக்குத் தேவையான கடற்கரைகள், வனப் பகுதிகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றை எளிதில் அணுகக்கூடிய இடத்தில் பூங்கா அமைந்திருப்பது படைப்பாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மிக குறைந்த காலப்பகுதிக்குள், குறைந்த செலவில் கலைஞர்களுக்கு தேவையான எந்தவொரு வகையிலுமான காட்சிப் பின்னணிகளை பெற்றுக்கொள்ளும் ஆற்றலும், இலகுவாக அந்த இடங்களை சென்றடையும் வாய்ப்பும் ரன்மிஹிதென்ன நகரத்தில் இந்த டெலி சினமா பூங்கா தாபித்திருப்பதால் ஏற்பட்டுள்ளது.

மேலும் தங்குமிடங்களுக்காக விலா B மற்றும் C வகையிலான அறைகள் அனைத்து வசதிகளுடன் நியாயமான விலையில் கலைஞர்களுக்கு வழங்கப்படுகின்றன. தேசிய டெலி சினிமா பூங்காவில் பின்னணி மற்றும் தங்குமிட வசதிகள் பொருட்டு வெளிநாட்டு மற்றும் வணிக படைப்புகளுக்கு அறவிடுகின்ற தொகைக்கு இணையாக, தேசிய டெலி சினிமா படைப்புகள் பொருட்டு சலுகை தொகையில் அறவிடப்படுகிறது.

2. பார்வையாளர்களுக்கு அனுமதிச் சீட்டுகளை வழங்குதல்

ஒரு திரைப்படம் அல்லது டெலி நாடகமொன்றின் ஆக்கப்படைப்பு நடவடிக்கைகள் ஓர் இடத்திலிருந்து நிறைவு செய்து கொள்வதற்கு முடியுமான டெலி சினிமா பூங்கா தொடர்பான எண்ணக்கரு இலங்கைக்கு ஒரு புதிய கருத்தாகும். ஆகையால் பெரும்பாலானோர் இந்த டெலி சினிமா பூங்காவை பார்வையிடுவதற்கு வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில், ஒரு தயாரிப்பு எவ்வாறு படமாக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும் வாய்ப்பும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த பூங்காவின் மூலம் நகர்ப்புற மக்கள் கிராமப்புற சூழல் பற்றிய புரிதலையும் அனுபவத்தையும் பெற முடியும் என்பதும் பொதுமக்களின் ஈர்ப்பை அதிகரிக்க உதவுகிறது.

இந்த அனுமதிச்சீட்டு வழங்குவதன் மூலம் பூங்கா ஆரம்பம் தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரை ரூபா.1,258,914.24 ஆன வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.



3. கோல்∴ப் கார்ட் வண்டி ஓட்டம்

தேசிய டெலி சினமா பூங்காவிற்கு வருகை தருகின்ற பார்வையாளர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் பூங்காவிற்குள் போக்குவரத்தை வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் இரண்டு கோல்∴ப் கார்ட் வண்டிகளை ஓட்டத்தில் விடப்பட்டது. கோல்∴ப் கார்ட் வண்டி பொருட்டு ஒரு பயணத்திற்கு ரூபா 500.00 தொகை அறவிடப்படுவதுடன், இதன் மூலம் ஐந்து பேருக்கு பயண வசதிகளை வழங்க முடியும். அதேபோன்று மாற்றுத்திறனாளிகளுக்கு சலுகைத் தொகையாக ரூபா.300.00 தொகை அறவிடப்படுகிறது.

2015 முதல் 2023 வரை கோல்∴ப் வண்டிகளை ஓட்டத்தில் பயன்படுத்தியதன் மூலம் ரூபா. 2,968,500.00 வருவாய் ஈட்டப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் ரூபா 181,500.00 வருமானம் உழைக்கப்பட்டதுடன், இது பூங்காவின் நாளாந்த வருமான நிலையை அதிகரிப்பதற்கு பெரிதும் உதவியது. ஆயினும், 2 கோல்∴ப் வண்டிகள் செயற்படாமை காரணமாக ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டதால், வருவாய் குறைந்துள்ளது.

4. விரிவுரை மண்டப வசதிகளை வழங்குதல்

பூங்காவின் முக்கிய செயல்பாடுகளைத் தவிர, பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான விரிவுரை மண்டப வசதிகளையும், பங்கேற்பாளர்களுக்கான தங்குமிட வசதிகளையும் வழங்கப்படுகிறது. குளிரூட்டும் வசதியுடன் கூடிய இந்த விரிவுரை மண்டபத்திற்கு நாளொன்றுக்கு ரூபா.10,000.00 ஆன தொகை அறவிடப்படுவதோடு, விரிவுரை மண்டபத்தில் ஒரே நேரத்தில் 60 பேருக்கு இடவசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2023-ம் ஆண்டில் விரிவுரை மண்டப வசதிகளை வழங்கும் பொருட்டு ரூபா. 51,000.00 ஆன வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

5. பிற சேவைகள்

மேற்கூறிய செயல்பாடுகளுக்கு மேலதிகமாக, திருமணத்திற்கு முந்தைய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களுக்கு தேவையான காட்சிகளை வழங்குதலும், உணவக வசதிகளை வழங்குதலும் நெல் மற்றும் தேங்காய் பொருட்களின் விற்பனை ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

திருமணத்திற்கு முந்தைய புகைப்படங்களுக்கு ரூபா.5,000.00 ம் தொகையும், வீடியோக்களுக்கு ரூபா.8,000.00 ம் ஆன தொகையும் அறவிடப்படுகிறது. அதேபோன்று அவர்களுக்கென ஒரு மேக்கப் அறையும் இலவசமாக வழங்கப்படுவதுடன், எந்தவொரு தடையுமின்றி உரிய வகையில் புகைப்படம் எடுப்பதற்குத் தேவையான வசதிகளும் வழங்கப்படுகின்றன.

பூங்காவிற்கு வருகை தருபவர்களின் பொருட்டு உணவக வசதிகளை கடற்படையால் மேற்கொள்ளப்படுகிறது. உணவகத்தின் வருவாயில் 40% ஆன இலாப சதவீதம் பூங்காவின் வருவாயில் சேர்க்கப்படுகிறது.

❖ மலையக பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அரசியலமைப்பு வாரியம்

மலையக சம்பிரதாய விவசாய கலாசாரத்தை பேணிக்காக்கும் வகையில், பாரம்பரிய மலையக மண் நெல் கலாசாரத்தை பாதுகாத்து மலையக பாரம்பரிய விவசாய கலாசாரத்தில் ஆர்வமுள்ள பண்பாட்டு மனிதனை உருவாக்குதல்.

ஏகாதிபத்திய செல்வாக்கால் பின்தங்கிய பிரதேசங்களை மேம்படுத்தல், இங்குள்ள மக்களின் பெருமையை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் முற்காலம் தொட்டு காணப்படும் குளக்கரைகள் மற்றும் சிறிய நீர்பாசன வாய்க்கால்களை புனரமைத்து விவசாய

தொழிலை உயர்த்துவதும் இதன் முக்கிய குறிக்கோள்களாகும். இப்பகுதியில் விவசாய நிலங்களின் அளவை விருத்தி செய்தல், விளைச்சலை அதிகரிப்பதன் ஊடாக விவசாய மக்களின் வருமானம் அதிகரித்தல் மற்றும் முற்காலத்தில் காணப்பட்ட தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்காக இக்கருத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி, 2023 ஆம் ஆண்டுக்காக 1,500,000.00 ரூபா நிதி ஒதுக்கப்பட்டதுடன், 100% ஆன நிதி முன்னேற்றமும், 100% ஆன பௌதீக முன்னேற்றமும் 2023 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின் மூலம் எட்டப்பட்டது.

- **உடுநுவர கலல்தொர நிலப்பகுதிக்கு ஏற்புடையதான கால்வாய் அபிவிருத்தி**

மலைநாட்டில் அபிமானத்துடன் கூடிய விவசாய கலாசாரத்தில் காண முடியுமான மிக முக்கியமான அம்சம் யாதெனில், மலைநாட்டு பெருமைமிக்க வப்மகுல் விழாவாகும். அதன்படி, வப்மகுல் வைபவத்தை நேரலையில் நடாத்தப்பட்டு அதனைப் பாதுகாக்கும் பொருட்டு 500,000.00 ரூபா பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் நிதி ஒதுக்கீடு இந்த நிறுவனத்திடம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால், இத்திட்டத்தை குறித்த நேரத்தில் செயல்படுத்த முடியவில்லை. அதன்படி, இதன் திருத்தமாக இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன்படி பழங்காலம் தொட்டு காணப்பட்ட குளக்கட்டுகள், மற்றும் சிறிய நீர்ப்பாசன வாய்க்கால்களை புனரமைத்து விவசாயத்தை மேம்படுத்தல், விளைச்சலை அதிகரிப்பதன் ஊடாக விவசாய மக்களின் வருமானம் அதிகரித்தல் மற்றும் முற்காலத்தில் காணப்பட்ட தன்னிறைவை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்காக இக்கருத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி 2023 ஆம் ஆண்டில் ரூபா. 500,000.00 தொகை நிதி ஒதுக்கப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் மூலம் 100% நிதி முன்னேற்றமும் 100% பௌதீக முன்னேற்றமும் எட்டப்பட்டது.



❖ டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளை

➢ **அபேக்ஷாவே வேதிகா மங்கல்ய டவர் நாடக விழா – 2023”**

டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையால் நடாத்தப்படுகின்ற அபேக்ஷாவே வேதிகா மங்கல்ய டவர் நாடக விழா – 2023” மருதானை டவர் மற்றும் எல்பின்ஸ்டன் தியேட்டர்களில் நடாத்தப்பட்டது.

மேடை நாடகக் கலைக்கு புத்துணர்வு அளிக்கும் வகையிலும், நாடக ரசிகர்களை நாடக அரங்குகளைச் சுற்றி ஒன்று திரட்டும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட, டவர் நாடக விழாவில் 25 நெடுநாடகங்களும், 12 குறுநாடகங்களும், 02 சிறுவர் நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

கௌரவ புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு.விதுர விக்கிரமநாயக்க அவர்களின் தலைமையில் ஆரம்ப நாள் நிகழ்வு இடம்பெற்றது.

➢ நாடகக் கலை மற்றும் கிராமர்போன் இசையில் லயனல் குணதிலக்கவின் பங்களிப்பு – நூல் வெளியிடல் மற்றும் அதற்கு இணையாக டவர் நாடகவியல் பெயர்பட்டியலை அறிமுகப்படுத்துதல்.

இருபத்து ஆறு ஆண்டுகள் முழுவதும் டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையுடன் இணைந்து, உள்நாட்டு நாடக கலையின் முன்னேற்றத்திற்காக பெரும் பணியாற்றிய தேர்ச்சித்திறமை வாய்ந்த இசைக்கலைஞரான கலாபூஷன லயனல் குணதிலக்க அவர்களால் நாடகக் கலைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக, திருமதி சந்தி சுத்தத்சாரி அவர்களால் எழுதப்பட்ட “இலங்கையின் நாடகக் சங்கீத கலையில் லயனல் குணதிலக்கவின் அணுகல்” நூலை வெளியிடும் விழா 2023.02.17 ஆம் திகதி 17.02.2023 அன்று சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கையின் நாடக சங்கீத கலையில் லயனல் குணதிலக்கவின் பங்களிப்பு என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரையை தேர்ச்சிபெற்ற பாடலாசிரியர் திரு. சுனில் சரத் பெரேரா அவர்களால் நடாத்தப்பட்டதுடன், அதற்கு இணையாக டவர்ஹோல் தியேட்டர் டவர் ஹோல் தியேட்டர் மன்றத்தால் தயாரிக்கப்பட்ட டவர் நாடக பெயர்பட்டியலை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விழாவினை மேலும், அலங்கரிக்கும் வகையில் நாட்டிய பூஷண, நாடக கலை சூடாமணி திரு ஸ்ரீ ஜயத்த கருணாசேகர அவர்களின் ஜயசங்க நடன மன்றத்தின் சரசவிபாய மாணவ மாணவிகளால் சரஸ்வதி அபிநந்தன நிகழ்ச்சி நடைபெற்றதுடன், டவர் நாடக மற்றும் நடனக்கலை பாடசாலையின் பழைய மாணவர்களாலும் நடன நிகழ்வொன்று நடாத்தினர்.

இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு.விதுர விக்கிரமநாயக்க, டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம்.எஸ். திசாநாயக்க, கலைஞர்கள் மற்றும் இலக்கியத்துறைச சார்ந்த பலர் கலந்துகொண்டனர்.



- **டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளை YouTube அலைவரிசை ஆரம்பித்தல்**

டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையால் Tower Hal Theatre Foundation YouTube Channel என்ற பெயரில் YouTube அலைவரிசையொன்று 2023.03.09 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது

டவர் மேடையில் பல ஆண்டுகளாக திறமைகளை வெளிக்காட்டி, மேடை நாடக துறைக்கு பாரிய பங்களிப்பு வழங்கிய வயதடைந்த டவர் கலைஞர்களின் பொருட்டு புத்தாண்டு பரிசு வழங்தல், 2023 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள சவ்சிறிபாய வளாகத்தில் நடைபெற்றது.

சிங்கள மற்றும் இந்து புத்தாண்டை முன்னிட்டு, டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளை மூலம் ஆண்டுதோறும் கலைஞர்களுக்கு புத்தாண்டு பரிசுகளை வழங்கி வருகிறது. இம்முறை ரூபா. 10,000.00 ம் மதிப்பிலான பரிசுகள் 44 டவர் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

- **நடிப்பு தொடர்பாக NVQ கற்கைநெறி ஆரம்பித்தல்**

டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையானது, மூன்றாம்நிலை மற்றும் தொழில்முறை கல்வி ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைவாக, மேடை நாடகம், தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நடிப்புக்குத் தேவையான நடைமுறை தொழில்முறை திறன்களை வழங்கும் நோக்கத்துடன், நடிப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கும், ஏற்கனவே நடிப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்கும் பங்களிப்புச் செய்ய முடியுமான வகையில் நடிப்பு தொடர்பான NVQ கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

கற்கைநெறி கற்பதற்காக கல்வி தகைமைகள் தேவைப்படுவதில்லை என்பதுடன், முழு கற்கைநெறியும் செய்முறை செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

நடிப்பு தொடர்பாக ஆர்வமுள்ள அனைவருக்கும் டவர்ஹோல் அறக்கட்டளை இதற்கான வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. கற்கைநெறிக்கு ஏற்புடையதான செய்முறை விரிவுரைகள் 2023 ஏப்ரல் 22 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் ஆரம்பம் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 ஆம் திகதி சவ்சிரிபாயவில் அமைந்துள்ள டவர்ஹோல் தியேட்டர் அறக்கட்டளையின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்றதுடன், சிறப்புத் திறமைவாய்ந்த நாடக கலைஞர் பேராசிரியர் மங்கள சேனாநாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் செனேஸ் பண்டார திஸாநாயக்க, சிறப்புத் திறமை வாய்ந்த நடிகர்

வில்சன் குணரத்ன, சிறப்புத் திறமை வாய்ந்த நடனக் கலைஞர் டவர்ஹோல் அறக்கட்டளையின் பொறுப்பாளர் சபை உறுப்பினர் பாலித்த சில்வா, சிறப்புத் திறமை வாய்ந்த நடன கலைஞர் சிரியந்த மெண்டிஸ் மற்றும் சிறப்புத் திறமை வாய்ந்த நாடக கலைஞர் ஜெரோம் டி சில்வா ஆகியோர் இனச் சந்தரப்பத்தில் கலந்துகொண்டனர்.

➢ **அகில இலங்கை பாடசாலை நாடகப் போட்டி (சிங்களம் மற்றும் தமிழ்) – 2022/2023 இரண்டு நாள் வதிவிட பயிற்சி பட்டறை**

அகில இலங்கை பாடசாலை நாடக போட்டித்தொடர் 2022/2023 இல் இறுதிச் சுற்றுக்கு தகைமை பெற்ற 39 நாடகங்களின் நாடக பணிப்பாளர்கள் மற்றும் நூர்த்தி நாடக நடிப்பு பிரிவின் இசை தொடர்பான பணிப்பாளர்களுக்காக 2023 செப்தெம்பர் 04 மற்றும் 05 ஆகிய தேதிகளில் வேயங்கொடை தேசிய கலாச்சாரப் பயிற்சி நிலையத்தில் இரண்டு நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இதன்போது அவர்களிடம் தரத்துடன் கூடிய நாடக தயாரிப்புகளை முன்னிலைப்படுத்துவதற்கு நாடக தயாரிப்பு. வசனம் எழுதுதல், நாடக இசை, இசையமைப்பு, அங்கஅசைவு, மேடை பின்னணி வடிவமைப்பு, நடிப்பு ஆகிய துறைகளை உள்ளடக்கி நடைமுறை பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ தேசிய அருங்கலைகள் கலை நிலையம் (நெளும் பொக்குண கலையகம்

கொல்டன் ப்ளிட் நடன நிகழ்ச்சி 2023.01.04



Australian Guild விருது விழா 2023.01.06

சீன கலாச்சார வைபவம் 2023.05.26

MRS SRI LANKA WORLD 2023
2023.09.13

DERANA FILM A WARDS -
2023.09.08

❖ காலி மரபுரிமை மன்றம்

➢ **பழைய பொலீஸ் குடியிருப்பு கட்டிடத்தை பாதுகாத்து வணிக பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தல்**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொழிலாளரகளின் மேற்பார்வையாளர்களது விடுதியாகப் பயன்படுத்தப்பட்ட இந்தக் கட்டிடம், பல கட்டங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளது. சில சுவர் பகுதிகளை கொரல் பயன்பாட்டுடன் நிருமாணிக்கப்பட்டுள்ளதுடன், சில சுவர் பகுதிகளை களிமண் சுவர்களாகவும், சில பகுதிகள் செங்கல் சுவர்காகவும் நிருமாணிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு வரை இந்தக் கட்டிடம் பொலிஸ் குடியிருப்பு கட்டிடமாக பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், இந்தக் கட்டிடம் வணிக பயன்பாட்டிற்காக காலி மரபுரிமை அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காலி கோட்டை பள்ளிய வீதியில் அமைந்துள்ள பழைய பொலிஸ் குடியிருப்பு கட்டிடம் பாதுகாக்கப்பட்டு பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளுக்காக (தேநீர் மற்றும் கோப்பி விற்பனை நிலையம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கடை, கைத்தறி ஆடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள், நினைவு பரிசுப் பொருட்களின் விற்பனை நிலையம், பொம்மை முகமூடிகள் மற்றும் தும்பர ரடா வடிவ பாய்கள் போன்றவற்றின் விற்பனை நிலையம், 02 சிற்றுண்டிச்சாலைகளுடன் கூடிய விற்பனை நிலைய்கள்) பயன்படுத்துவதற்கு

சிறந்த மட்டத்திலான வர்த்தக சமூகத்திடம் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதற்கு காலி மரபுரிமை அறக்கட்டளை எதிர்பார்க்கின்றது. கட்டிடத்தின் திட்டங்களை தயாரித்து வழங்கியதன் ஊடாக கட்டிடக்கலை நிபுணராக திரு. மஞ்சுள கல்ஹாரா அவர்களும், பொறியியற் ஆலோசனை நிறுவனமாக பொறியியல் ஆலோசனை தொடர்பான மத்திய ஆலோசகர் பணியகமும் ஒப்பந்த கம்பெனியாக லியனாராச்சி பில்டர்ஸ் நிறுவனமும் இணைந்துள்ளது.

தற்போது, கட்டடத்தின் அடிப்படை பராமரிப்புப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன், வெளிப்புறப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. ஒரு மாடி கட்டிடமாக கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடம் மொத்தம் 3,380 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளதுடன், இரண்டு வாகன நிறுத்துமிடங்களைக் கொண்டுள்ளது.

பழைய கட்டிடமொன்றை பாதுகாப்பதன் மூலம் பிராந்திய பொருளாதாரம் வலுவடைதல் மட்டுமின்றி அதன்மூலம் காலி மரபுரிமை அறக்கட்டளைக்கு வருமானம் கிடைப்பதால், இந்த திட்டம் பாதுகாப்புத் திட்டமாக அறிமுகப்படுத்த முடியும்.

கட்டிடத்தை முழுமையாகப் பாதுகாத்தல், பழைய குதிரை நிறுத்துமிடத்தைப் பாதுகாத்தல், பழைய கட்டிடத்தைப் பாதுகாத்து கழிப்பறை அமைப்பு நிருமாணித்தல், நில வடிவமைப்பு, மின்சாரம் மற்றும் தண்ணீர் இணைப்புகளைப் பெறுதல் போன்றவற்றை கொண்டு இந்த திட்டத்தை முடிப்பதற்கு ரூபா. 54 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.






- டிஜிட்டல் விளம்பரத் திட்டம்

  உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கப்பட்டு ஒரு பயண முடிவிடத்தை குறித்து நிற்கும் உலக உரிமை காலி கோட்டையின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் சுற்றுலாத் துறையின் மனதை கவர்ந்துள்ள விடய துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டு காலி கோட்டையின் வரலாற்று மற்றும் கலாச்சார பெறுமதியை உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாத் துறையினறுக்கிடையில் பிரபல்யப்படுத்தும் அபிலாஷையுடன், சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் விளம்பரத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இவற்றுக்கிடையில் whatsapp, Tiktok, Facebook, Instagram போன்ற சமூக வலைதளங்கள் ஊடாக பல்வேறு பிரசாரங்கள்

மேற்கொண்டுள்ளதால், காலி மரபுரிமை அறக்கட்டளையின் காட்சியறைகளுக்கு வருகை தருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை விசேட அம்சமாகும். இதற்காக ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.





- 3D Geometry Program (வடிவவியல் திட்டம் - 3D திட்டம்)

உலக உரிமை காலி கோட்டையின் முழுமையான அமைப்பு உள்ளடக்கிய 3D உருவப்படங்களை உபயோகப்படுத்தி Photogrammetric தொழில்நுட்பம் கொண்டு உருவாக்கப்பட்ட முழுமையான காலி கோட்டையின் வடிவவியல் திட்டம் 2023 ஆம் ஆண்டில் ஒரு திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக நெதர்லாந்து நட்புறவு சங்கத்தின் ஆலோசனை ஆதரவுடன் வடிவவியலில் நிபுணத்துவம் பெற்ற திரு.மனோஜ் தெவரப்பெரும அவர்களின் பூரண பங்களிப்பும் இதற்காக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை முப்பரிமாண Imaging வசதியுடன் கூடிய காலி கோட்டையின் முழுமையான விவரங்கள் உள்ளடக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முதல் முறையாகும்.

- **காலி கோட்டைக்கு ஏற்புடையதான விசேட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை இற்றைப்படுத்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ், காலி கோட்டையில் பயன்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு விசேடமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **காலி உறுமய வாரம் மற்றும் விருது வழங்கும் விழா**

வரலாற்றுச் சிறப்புமிக்க காலி கோட்டை உலகப் பாரம்பரியச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 35 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு, காலிக் கோட்டை வளாகத்தில் காலு உறுமய வாரம்" என்ற நிகழ்ச்சித் தொடர் 2023.12.16 தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இதற்கு

தொல்பொருள் திணைக்களம், அருங்காட்சியகங்கள் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்துடன் இணைந்து காலி உறுமய அறக்கட்டளை பங்களிப்பு வழங்கியது.

"காலு உறுமய வாரத்தின்" விசேட அம்சங்களாக கண்காட்சிகள், விரிவுரைகள், காலி கோட்டைக்கான களப்பயணங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள், கட்டிட மருத்துவ மனைகள், பாடல் நிகழ்ச்சிகள், கண்காட்சி சாவடிகள், விற்பனை நிலையங்கள், உள்ளூர் உணவு உற்பத்திகள், பொருட்கள், கைவினைப்பொருட்கள், சிற்பங்கள், உள்ளூர் மருத்துவ கிளினிக்குகள் போன்றவை காணப்பட்டன. காலி கோட்டை கடல்சார் தொல்பொருள் அருங்காட்சியக கூட்ட மண்டபத்தில் 2023.12.16 ஆம் திகதி மாலை 04.00 மணியளவில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு.விதுர விக்கிரமநாயக்க அவர்களின் தலைமையில் தொடக்க விழா நடைபெற்றது. அதில், காலி கோட்டையில் வசிப்பவர்களின் வீடுகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் நன்கு பராமரிக்கப்படும் வீடுகள் தொடர்பில் ஒரு தேர்வு குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பரிசுகளும் விருதுகளும் வழங்கப்பட்டன.

2023.12.16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 20 ஆம் தேதி கலாச்சார நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு, போட்டிகளில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில், காலி கோட்டையை பார்வையிடவும், அதன் அனுபவத்தை அனுபவிக்கவும் ஏராளமானோர் வருகை தந்தனர்.

உறுமய விருதுகள் வழங்கும் விழா

